தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

### தென் கடலோர மாவட்டங்களில் இன்று மழை பெய்ய வாய்ப்பு

தென் கடலோர மாவட்டங்களில் திங்கள்கிழமை மழை பெய்யும் என சென்னை வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன் வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை ஞாயிற்றுக்கிழமை காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறியது. இது தற்போது, தென்மேற்கு வங்க கடலில் நாகப்பட்டினத்துக்கு தென்கிழக்கே 290 கிலோ மீட்டர் தொலைவிலும், இலங்கைக்கு கிழக்கே 120 கிலோ மீட்டர் தொலைவிலும் மையம் கொண்டுள்ளது.

இந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் ஞாயிற்றுக்கிழமை இரவு திரிகோணமலையில் கரையைக் கடக்கும் என்றும் அதன் பின்னர் தமிழகத்தை நோக்கி வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக தென் தமிழக கடலோர மாவட்டங்களில் திங்கள்கிழமை மழை பெய்யும். மேலும் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவும் வாய்ப்புள்ளது. உள் தமிழகத்தைப் பொருத்தமட்டில் பொதுவாக வறண்ட வானிலை நிலவும்.

சென்னை: சென்னையில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். ஒரு சில இடங்களில் லேசான மழையும் பெய்யக்கூடும். தரைக்காற்று சில நேரங்களில் பலமாக வீசக்கூடும் என்றும் வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது. குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக சென்னை, கடலூர், தூத்துக்குடி உள்ளிட்ட துறைமுகங்களில் எச்சரிக்கை கூண்டு எண் 1 ஏற்றப்பட்டுள்ளது.

## திருமங்கலம் பகுதி விவசாயிகளுக்கு பெரியாறு அணை நீரை திறந்து விட எம்.பி. கோரிக்கை

மதுரை மாவட்டம், திருமங்கலம் பகுதி விவசாயிகளுக்கு முல்லைப் பெரியாறு அணை தண்ணீரை திறந்து விடவேண்டும் என்று, தமிழக முதல்வருக்கு விருதுநகர் மக்களவைத் தொகுதி உறுப்பினர் ப. மாணிக்கம் தாகூர் கோரிக்கை விடுத்துள்ளார்.

ப. மாணிக்கம் தாகூர் எம்.பி. விடுத்துள்ள கோரிக்கை: பருவமழை பொய்த்துப் போனதால், வறட்சி காரணமாக விவசாயிகள் பெரும் பாதிப்படைந்துள்ளனர்.

மழை இல்லாத காரணத்தால், பயிர்கள் கருகி விவசாயிகள் துயரத்துக்கு ஆளாகியுள்ளனர்.

குறிப்பாக, தென்மாவட்டங்களில் மானாவாரி விவசாயத்தை நம்பியுள்ள விவசாயிகள் வாழ்வாதாரத்தை இழந்து நிற்கின்றனர்.

பெரியாறு நீர்த் தேக்கத்திலிருந்து ஒரு போக சாகுபடி பயிர்களை காப்பாற்றுவதற்காக தண்ணீர் திறந்து விடக் கோரி, மேலூர் பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்ததால், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் உயர்மட்டக் குழு கூட்டம் நடைபெற உள்ளது.

பெரியாறு நீர்த் தேக்கத்திலிருந்து வரக்கூடிய தண்ணீரை, கம்பம் பள்ளத்தாக்கு, மேலூர் மற்றும் திருமங்கலம் பகுதி விவசாயிகள் நம்பியுள்ளனர்.

எனவே, முல்லைப் பெரியாறு நீர்த் தேக்கத்திலிருந்து தண்ணீர் திறந்து விடுவது சம்பந்தமாக முடிவு எடுக்கும்போது, திருமங்கலம் பகுதி விவசாயிகளும் பாசன வசதி பெறும் வகையில் முடிவெடுக்க வேண்டுமென்று, திருமங்கலம் பகுதி விவசாயிகள் சார்பில், தமிழக முதல்வரைக் கேட்டுக் கொள்வதாக க் கூறியுள்ளார்.

**கேரட் விளைச்சல் அதிகரிப்பால் விலை சரிவு**

கொடைக்கானலில் கேரட் விளைச்சல் அதிகரித்துள்ளதால் குறைவாகவே விலை போகிறது.

கொடைக்கானலில் பல்வேறு வகையான காய்கறிகள் விளைவிக்கப்படுகின்றன. செண்பகனூர், நாயுடுபுரம், பச்சைமரத்து ஓடை, வில்பட்டி, அட்டுவம்பட்டி, மாட்டுப்பட்டி, குறிஞ்சி நகர், பிரகாசபுரம், அப்சர்வேட்டரி உள்ளிட்ட இடங்களில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் கேரட் பயிரிடப்பட்டிருந்தது. இந்த ஆண்டு அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டிருந்ததால் கேரட் விளைச்சல் அதிகரித்துள்ளது. இதனால் விலை குறையத் தொடங்கியுள்ளது. 10 கிலோ கேரட் ரூ. 200 முதல் ரூ. 250 வரை விற்றால்தான் விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கும். ஆனால் தற்போது ரூ.100 முதல் ரூ.120 வரை செல்கின்றன. இங்கு விளையும் கேரட் மதுரை,திருச்சி,சென்னை,கேரளாவிற்கு அனுப்பப்படுகிறது.

இது குறித்து விவசாய சங்கத்தைச் சேர்ந்தவர்கள் கூறியதாவது: விவசாயிகள் பொதுவாக ஓரே விதமான காய்கறிகளை பயிரிட்டு வருவதால் விலையில் மாற்றம் ஏற்படுகிறது இதில் லாபமும் கிடைக்கும் நட்டமும் ஏற்பட வாய்ப்பு உண்டு. இவற்றைத் தவிர்க்க கொடைக்கானல் பகுதிகளில் உள்ள விவசாயிகள் பயிர்களை மாறி மாறி சாகுபடி செய்ய வேண்டும். விலையும் நன்கு கிடைக்கும். எனவே சுழற்சி முறையில் காய்கறி சாகுபடி செய்வது நல்லது என்றனர்.

**பண்ணைக்குட்டைகளில் வேளாண் துணை இயக்குநர் ஆய்வு**

பழனியில் நடைபெற்று வரும் பல்வேறு வேளாண் பணிகளை வேளாண்மை துணை இயக்குநர் ஆய்வு செய்தார்.

பழனி அருகே பெரியம்மாபட்டியில் தனியார் தோட்டங்களில் அரசின் நூறுசத மானியத்துடன் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் பண்ணைக் குட்டைகளை திண்டுக்கல் மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் (மாநிலத்திட்டம்) தங்கச்சாமி ஆய்வு செய்தார். தொடர்ந்து பயறுவகை சாகுபடி தொழில்நுட்ப பயிற்சியை துவக்கி வைத்தார்.

நிகழ்ச்சிக்கு ஒன்றியக்குழு உறுப்பினர் பழனிச்சாமி முன்னிலை வகித்தார். பழனி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சாந்தாமணி தொழில்நுட்ப உரை நிகழ்த்தினார்.

நிகழ்ச்சிகளில் வேளாண்மை அலுவலர் கணேசன், துணை வேளாண்மை அலுவலர் துரைச்சாமி, உதவி அலுவலர் செல்லச்சாமி, முரளிதரன், ராஜாசேட், சசிக்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு தொழில் நுட்ப பயிற்சி

அட்மா திட்டத்தின் கீழ் அகரம் பகுதியைச் சேர்ந்த விவசாயிகளுக்கு நிலக்கடலை சாகுபடி குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

திண்டுக்கல்லை அடுத்துள்ள அகரம் பேரூராட்சிக்குள்பட்ட லட்சுமணன்பட்டி விவசாயிகளுக்கு அட்மா திட்டத்தின் கீழ் பண்ணைப்பள்ளி மூலம் பயிற்சி அளிக்கப்பட்டது. அதில் நிலக்கடலை சாகுபடி செய்வதற்கான தொழில்நுட்பங்கள் குறித்து வேளாண்மைத்துறை அதிகாரிகள் விளக்கம் அளித்தனர்.

துவக்க நிகழ்ச்சிக்கு தலைமை வகித்த வேளாண்மை உதவி இயக்குநர் வே.அருள்அரசு பேசும்போது, விதைப்பு முதல் அறுவடை வரை 6 நிலைகளில், நிலக்கடலை சாகுபடி தொழில்நுட்ப முறைகள் குறித்து விவசாயிகளுக்கு செயல்முறை அளிக்கப்படும் என்றார்.

நிகழ்ச்சியில் பங்கேற்ற மதுரை வேளாண்மைக் கல்லூரியின் உழவியல் துறை பேராசிரியர் து.சுந்தர்சிங் ராஜாபண்டியன் அளித்த விளக்கம்: கடலை விதை நேர்த்திக்கு ரைசோபியம் (ம)அப்ஸாஸ்பைரில்லம் போன்ற உயிர் உரங்களை, ஹெக்டருக்கு 600கிராம் வீதம் பயன்படுத்தினால் ரசாயன உரச் செலவை குறைக்க முடியும்.

மேலும் விதைப்பு நாளிலிருந்து 40 முதல் 45 வது நாளில்(இறவை), 45 முதல் 75வது நாளில்(மானாவாரி) ஹெக்டருக்கு 400 கிலோ வீதம் ஜிப்சம் பயன்படுத்த வேண்டும். இதனால் காய் வளர்ச்சி அடைவதோடு, நூற்புழுக்களால் ஏற்படும் பொருளாதார இழப்புகளையும் தவிர்க்க முடியும் என்றார்.

அகரம் பேரூராட்சி தலைவர் க.சக்திவேல், விவசாயிகளுக்கான ஒருங்கிணைந்த கையேட்டினை வழங்கினார். வேளாண்மைத்துறை மானியத்திட்டங்கள் குறித்து மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் க.செல்வராஜ் எடுத்துரைத்தார். முகாமில் வேளாண்மை அலுவலர்கள் ரா.சின்னசாமி, கு.ம.கிருஷ்ணகுமார், ஐ.பொன்ராஜ் ராஜேந்திரன், அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சு.ராமகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**கோமாரி நோயால் இறந்த கால்நடைகளுக்கு நிவாரணம் வழங்க கம்யூ. கோரிக்கை**

சிவகங்கை மாவட்டத்தில் கோமாரி நோய் பாதிப்பால் உயிரிழந்த கால்நடைகளுக்கு தமிழக அரசு நிவாரணம் வழங்க வேண்டும் என மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

கட்சியின் சிவகங்கை மாவட்டக்குழு கூட்டம் மாவட்ட செயற்குழு உறுப்பினர் எஸ்.முத்துராமலிங்க பூபதி தலைமையில் சிவகங்கையில் நடைபெற்றது. மாநில செயற்குழு உறுப்பினர்கள் எம்.என்.எஸ்.வெங்கட்ராமன், கே.கனகராஜ், மாவட்டச் செயலாளர் ஏ.ஆர்.கே.மாணிக்கம், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் மு.கந்தசாமி, ஆர்.கே.தண்டியப்பன், அரு.மோகன், வி.கருப்புச்சாமி, ஆர்.வீரையா, வேணுகேபால், மாவட்டக்குழு உறுப்பினர்கள் சாந்தி, மணியம்மா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் சிவகங்கை மாவட்டத்தில் திருப்புவனம், பழையனூர், எஸ்.புதூர், சாக்கோட்டை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கோமாரி நோய் பாதிப்பு ஏற்பட்டு ஆடு, மாடுகள் உயிரிழந்துள்ளன. கால்நடைகளை இழந்து தவிக்கும் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்.

கடந்த ஆண்டும், இந்த ஆண்டும் கடும் வறட்சி பாதித்து விவசாயம் பொய்த்தன் காரணமாக கால்நடைகளுக்கு தீவனம் கிடைப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. கால்நடை தீவனம் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். பயிர் காப்பீட்டுத் தொகை செலுத்தும் தேதியை ஜனவரி 15 வரை நீடிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**பருவ மழை பொய்த்ததால் பயிர்கள் கருகின**

திருவாடானை தாலுகா முழுவதும் பருவ மழை பொய்த்து பயிர்கள் கருகியதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தமிழகத்தின் நெற்களஞ்சியமான திருவாடானை தாலுகா முழுவதும் சுமார் 1லட்சத்து 50ஆயிரம் ஏக்கர் நிலப்பரளவில் விவசாயம் செய்யப்படுகிறது.திருவாடானை, அஞ்சுகோட்டை, ஆதியூர், திருவெற்றியூர், தொண்டி, வெள்ளையபுரம், பாண்டுகுடி, மங்களக்குடி,ஆர்.எஸ் மங்களம்,பாரனூர், உப்பூர், மணக்குடி, ஆனந்தூர் என 100க்கும் மேற்பட்ட கிராமங்களில் 1லட்சத்து 20ஆயிரம் ஏக்கர் நிலப்பரளவில் விவசாயிகள் நேரடி நெல் விதைப்பில் ஈடுபட்டுள்ளனர். ஆர். எஸ்.மங்கலம்,செங்குடி, பாரனூர், என்.எம்.மங்களம், மங்களக்குடி, கட்டிவயல் போன்ற 50க்கும் மேற்பட்ட கிராமங்களில் கரும்பு,வாழை,பருத்தி, சிறுதானியங்கள் சுமார் 30ஆயிரம் ஏக்கர் நிலப்பரளவில் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது.

முதல் கட்டமாக சில நாள்கள் மட்டும் பெய்த மழையை நம்பி விவசாயிகள் சாகுபடி பணிகள் மேற்கொண்டனர். இதனால் பயிர்கள் நன்கு வளர்ந்து களை வெட்டும் பணி ஆரம்பித்து ஏக்கர் ஒன்றுக்கு 10ஆயிரம் வரை செலவு செய்துள்ளனர். இந்நிலையில் கடந்த சில மாதங்களாக பருவ மழை பொய்த்து கடும் வெயில் அடிப்பதால் பயிர்கள் கருகிவிட்டன இதனால் விவசாயிகள் பெரும் கவலை அடைந்துள்ளனர். இந்த ஆண்டு பொங்கல் வறட்சிப் பொங்கல்தான் என விவசாயிகள் தெரிவித்தனர்.

கடந்த ஆண்டு வழங்க வேண்டிய பயிர் காப்பீடு இழப்பீடுத் தொகை இது வரை வழங்கப்படவில்லை.

இந்த ஆண்டும் பயிர் காப்பீடு செய்து விவசாயிகள் ஆவலுடன் எதிர்பார்த்து உள்ளனர். எனவே சம்பந்தபட்ட மாவட்ட நிர்வாகம் தக்க நவடிக்கை எடுத்து நிவாரணம் உடனடியாக வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

### பல்லடம் கறிக்கோழி பண்ணை கொள்முதல் விலை வீழ்ச்சி

தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களில் கறிக்கோழி விற்பனை மார்க்கெட் நிலவரத்துக்கேற்ப பல்லடம் பி.சி.சி. (பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் பண்ணைக் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது. சனிக்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.77 ஆக இருந்தது.

கோழி இறைச்சி விற்பனை குறைவால், ஞாயிற்றுக்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.75 ஆக விலையை குறைத்து நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

### சேமிப்பு கிடங்குகளில் கால்நடை தீவனம் வழங்கத் திட்டம்

வேலூர் மாவட்டத்தில் வறட்சியை சமாளிக்கும் முயற்சியாக 5 கால்நடை தீவன சேமிப்பு கிடங்குகளில் தீவனங்களை வழங்குவதற்கானத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

இதுகுறித்து கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: சொந்தமாக கால்நடை பராமரிக்கும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு இத்திட்டம் பயனளிக்கும். வறட்சியால் மேய்ச்சல் நிலங்களில் தீவன உற்பத்தி அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. உற்பத்தி செய்யக் கூடிய தீவனத்தின் அளவு பூர்த்தி செய்ய இயலாத நிலையில் இத்திட்டத்தை செயல்படுத்தி வைக்கோல், சோளம், மக்காசோளம் தட்டுகள் மற்றும் உலர்தீவனங்கள் உற்பத்தி செய்யும் விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்து கால்நடை தீவன தட்டுகளையும், வறட்சியை சமாளிக்க கொள்முதல் செய்யப்படும் தீவனங்களையும் கால்நடை வளர்க்கும் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்குவதே இத்திட்டத்தின் குறிக்கோள். கால்நடை தீவனம் ஒரு கிலோவுக்கு ரூ.2 வீதம் விற்க வேண்டும் என தெரிவிக்கப் பட்டுள்ளது. உலர் தீவனங்களின் விலை ஒரு கிலோவுக்கு ரூ.5 முதல் ரூ.10 வரையில் விற்கப்படும்.

தமிழக அளவில் 125 தீவன சேமிப்பு கிடங்குகள் அமைக்கப்படவுள்ளது. இதில் வேலூர் மாவட்டத்தில் ராணிப்பேட்டை, குடியாத்தம் மற்றும் திருப்பத்தூரில் உள்ள கால்நடை மருத்துவமனைகள், சோளிங்கரில் உள்ள கால்நடை மருந்தகம்,

வேலூரில் உள்ள கால்நடை பெருமருத்துவமனை ஆகிய 5 இடங்களில் தீவன கிடங்குகள் செயல்படும். இத்திட்டத்தின் முதல் பகுதியாக கால்நடை தீவனங்களை ஒரு கிலோவுக்கு ரூ.2 வீதம் நிரந்தர மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கவேண்டும்.

கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவர் கால்நடை தீவனங்களை கொள்முதல் செய்வதற்கும், சேமித்து வைப்பதற்கும் அந்த கிடங்கின் பாதுகாவலராகவும் இருப்பார்.

தேர்வு செய்யப்பட்ட சேமிப்பு கிடங்களுக்கு உலர் தீவனங்களை கொள்முதல் செய்து விநியோகம் செய்வதற்கான ஒப்பந்தப் புள்ளிகளை ஆட்சியர் மேற்கொள்வார். உலர் தீவனங்களை கால்நடைகளின் உரிமையாளர்களுக்கு வழங்குவதற்காக உலர் தீவன அட்டைகள் வழங்கப்படும். ஒரு மாட்டுக்கு ஒரு நாளைக்கு 3 கிலோ வீதம் உலர் தீவனம் வழங்கப்படும். தனி நபர் ஒருவர் ஒரு வாரத்துக்கு தேவையான 5 கால்நடைகளுக்கான தீவனத்தை வாங்கிக் கொள்ளலாம்.

பயனாளிகள் கால்நடைகளின் உரிமையாளர்களாக இருக்கவேண்டும். முதல் முறை உலர் தீவனம் வாங்கும்போது, குடும்ப அட்டையை கொண்டு வர வேண்டும். அதன் அடிப்படையில்தான் தீவன அட்டைகள் வழங்கப்படும்.

### கறவை மாடுகளுக்கு ரூ.5 லட்சத்து 75ஆயிரம் கடனுதவி

சேத்துப்பட்டு ஒன்றியம் பெரணம்பாக்கம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் கறவை மாடுகள் வாங்க கடனுதவி வழங்கும் விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

சேத்துப்பட்டு ஒன்றியத்தைச் சேர்ந்த பெரணம்பாக்கம் ஊராட்சியில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் கறவை மாடுகள் வாங்குவதற்கான கடனுதவி வழங்கும் விழா நடைபெற்றது. விழாவுக்கு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத் தலைவர் சி.ராஜி தலைமை வகித்தார். சங்கச் செயலாளர் முத்து வரவேற்றுப் பேசினார். ஆத்துரை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன்

சங்கத்தின் தலைவர் ராகவன் 23 பால் உற்பத்தியாளர்களுக்கு தலா ரூ.25 ஆயிரம் என ரூ.5 லட்சத்து 75 ஆயிரம் வழங்கினார். ஆத்துரை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கச் செயலாளர் மண்ணு, துணைத் தலைவர் மணிவண்ணன், பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத் துணைத் தலைவர் காசி, ஆவின் கால்நடை மருத்துவர் அர்ஜுனன், போளூர் கள மேலாளர் இளங்கோ, சரக மேற்பார்வையாளர் முத்து, பணியாளர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

**இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க சிறப்பு மானியம்**

இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க, விவசாயிகளுக்கு தமிழக அரசு சிறப்பு மானியம் வழங்க வேண்டும் என்று களஞ்சியம் பெண் விவசாயிகள் வலியுறுத்தினர். திருவண்ணாமலையில் அண்மையில் நடைபெற்ற இவ்வமைப்பின் 7வது மாநில மாநாட்டில், மேற்கண்ட கோரிக்கையை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டுறவு வங்கிகளில் பெண் விவசாயிகளுக்கு கடன் வழங்க வேண்டும். உர நிறுவனங்களுக்கு சலுகை வழங்குவதற்குப் பதிலாக விவசாயிகளுக்கு மானியம் வழங்க வேண்டும். ஊராட்சி அளவில் வேளாண் விளைபொருள்களைக் கொள்முதல் செய்ய வேண்டும். ஊராட்சிக்கு தேவைக்கு அதிகமாக இருக்கும் விளை பொருள்களை நகரத்துக்கு அனுப்பும் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத் தொழிலாளர்கள் விவசாயப் பணிக்கும் பயன்படுத்த வேண்டும். ஏரி, குளம், குட்டைகளை தூர்வார வேண்டும். ரேஷன் கடைகளில் அரிசியுடன் சிறு தானியங்களையும் விநியோகிக்க வேண்டும். தமிழகத்தில் பூரண மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

பெண்கள் இணைப்புக் குழுவின் மாநிலத் தலைவி ஷீலு தலைமை வகித்தார். மாவட்ட வேளாண் இணை இயக்குநர் என்.பன்னீர்செல்வம், பண்டரெட்டியார் சங்கத் தலைவர் என்.பாலகிருஷ்ணன், திருவண்ணாமலை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சுமதி உள்ளிட்டோர் பேசினர்.

## பரமத்தி வேலூர் வெற்றிலை ஏலச் சந்தையில் விலை உயர்வு

பரமத்தி வேலூர் வெற்றிலை ஏலச் சந்தையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் வெற்றிலையின் விலை உயர்ந்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். பரமத்தி வேலூர் சுற்று வட்டாரப் பகுதிகளில் ஏராளமான ஏக்கரில் வெற்றிலை பயிர் செய்யப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் வெள்ளைக்கொடி வெற்றிலை, பச்சைக்கொடி, கற்பூரி ஆகிய மூன்று வகை வெற்றிலைகள் பயிர் செய்யப்பட்டு வருகின்றன. இங்கு விளையும் வெற்றிலைகள் பரமத்தி வேலூர் நான்கு சாலையில் நடைபெறும் வெற்றிலை ஏலச் சந்தைக்கு கொண்டு வரப்பட்டு ஏலம் விடப்படுகின்றன. இதுதவிர, திருச்சி, கரூர் ஆகிய மாவட்டங்களில் இருந்தும் வெற்றிலைகள் ஏலத்திற்கு கொண்டு வரப்படுகின்றன. வெற்றிலைகள் தரத்திற்கு தகுந்தாற்போல ஏலம் விடப்படுகின்றன. ஏலம் எடுப்பதற்கு தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், கேரளம் மாநிலத்தில் இருந்தும் வியாபாரிகள் வந்து செல்கின்றனர். கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் ( 104 கவுளிகள் கொண்ட சுமை ஒன்று) வெள்ளைக்கொடி இளம்பயிர் வெற்றிலை ரூ.3 ஆயிரத்துக்கும், கற்பூரி வெற்றிலை இளம்பயிர் ரூ.3 ஆயிரத்துக்கும் ஏலம் போனது.

முதியம் பயிர் வெள்ளைக்கொடி வெற்றிலை சுமை ஒன்று ரூ.1500-க்கும், முதியம் பயிர் கற்பூரி வெற்றிலை சுமை ஒன்று ரூ.1500-க்கும் ஏலம் போனது.

ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் வெள்ளைக்கொடி இளம்பயிர் வெற்றிலை ரூ.4 ஆயிரத்துக்கும், கற்பூரி வெற்றிலை இளம்பயிர் ரூ.4 ஆயிரத்து 200-க்கும் ஏலம் போனது. முதியம் பயிர் வெள்ளை வெற்றிலை சுமை ஒன்று ரூ.2 ஆயிரத்துக்கும், முதியம் பயிர் கற்பூரி வெற்றிலை சுமை ஒன்று ரூ.3 ஆயிரத்துக்கும் ஏலம் போனது.

தற்போது அதிக அளவில் பனிப் பொழிவு உள்ளதால் வெற்றிலை உற்பத்தி குறைந்துள்ளதாலும், வெளி மாநிலங்களின் வெற்றிலையின் வரத்து குறைந்துள்ளதாலும் விலை உயர்ந்துள்ளது என விவசாயிகள் தெரிவித்தனர்.

வெற்றிலை விலை உயர்ந்துள்ளதால் வெற்றிலை பயிர் செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

### "உயர்த்தப்பட்ட பால் கொள்முதல் விலையை வழங்காவிட்டால் போராட்டம்'

தமிழக அரசு அண்மையில் அறிவித்த பால் கொள்முதல் விலையை முழுமையாக வழங்காவிட்டால், போராட்டத்தில் ஈடுபட உள்ளதாக, தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் ராமகவுண்டர் சனிக்கிழமை தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியது:

தமிழக விவசாயிகள் சங்கம், தமிழக பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் உயர் மட்டக் குழுக் கூட்டம், மாவட்டப் பொருளாளர் அசோக்குமார் தலைமையில் நடைபெற்றது. பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும் என, விவசாயிகள் போராடி வந்த நிலையில், தமிழக அரசு விவசாயிகளை அழைத்துப் பேசாமல் திடீரென பால் கொள்முதல் விலையை ரூ.3 உயர்த்தி வழங்குவதாக அறிவித்தது.

ஆனால், அரசு அறிவித்தபடி பாலுக்கு ரூ.3 உயர்த்தி வழங்காமல், சங்கத்தின் நிர்வாகச் செலவுக்கு என பணம் பிடித்தம் செய்யப்பட்டு ரூ.2 மட்டுமே வழங்கப்படுகிறது. மேலும், அந்தந்தச் சங்கங்கள் பால் கொள்முதல் விலையை நிர்ணயித்துக் கொள்ளலாம் என அரசு கூறியதாகத் தெரிகிறது. அரசின் இத்தகைய அறிவிப்பால் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

அரசு அறிவித்தபடி பால் கொள்முதல் விலையை முழுமையாக வழங்கா விட்டால் விரைவில் போராட்டம் நடத்த முடிவு செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

### 3 ஆயிரம் ஹெக்டேரில் சாமந்தி சாகுபடிஜி.விஜயகுமார்

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியப் பகுதிகளில் 3 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் சாமந்திப் பூ சாகுபடி நடைபெற்றுள்ள நிலையில், சென்ட் தொழில்சாலை திறக்க வேண்டுமென்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஓமலூர் அருகேயுள்ள காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம் விவசாயத்தை பிரதான தொழிலாகக் கொண்ட பகுதியாகும்.

சேலம் - தருமபுரி மாவட்டத்தின் எல்லையில் உள்ள இங்கு இயற்கையாகவே நல்ல மண்வளம் அமைந்துள்ளதால், இந்தப் பகுதியில் சாமந்திப்பூ சாகுபடி அதிக அளவில் நடைபெறுகிறது.

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் இதற்கான நடவுப் பணிகள் நடைபெற்றன. டிசம்பர் மாதம் முதல் சாமந்திப் பூக்கள் பூக்கத் தொடங்கி, தற்போது சீசன் உச்சகட்டத்தை அடைந்துள்ளது.

சாமந்தி, சாந்தினி (அதிக அளவில் மஞ்சள் நிறத்தைக் கொண்டது), பூர்ணிமா (வெள்ளை நிற சாமந்தி), கோழிக் கொண்டை, மரிக்கொழுந்து எனப் பல்வேறு வகை பூக்கள் சுமார் 3 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. இதனால், சேலம் - பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையின் இரு பக்கங்களும் மலர்த் தோட்டங்களாகக் காட்சியளிக்கின்றன.காடையாம்பட்டி அருகேயுள்ள வேப்பிலை ஊராட்சி, செக்காரப்பட்டி பகுதியில் போதிய மழை இல்லாததால், இந்தப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயி சித்தப்பன் தன்னுடைய சாமந்திப் பூத்தோட்டத்தில் சொட்டு நீர்ப்பாசனத்தை பயன்படுத்தியுள்ளார்.

தமிழக அரசின் 100 சத மானியத்துடன் அமைக்கப்பட்டுள்ள சொட்டு நீர்ப்பாசனத்தின் காரணமாக 10 சென்ட் பரப்பளவிலான சாமந்தி சாகுபடிக்கு போதுமான நீர் கிடைத்துள்ளது. வழக்கமான முறையில் விவசாயம் செய்தால், 2 சென்ட் பரப்பு நிலத்துக்கு மட்டுமே தன்னுடைய கிணற்று நீரைப் பயன்படுத்த முடியும் என்றும், சொட்டு நீர்ப்பாசனத்தால் 10 சென்ட் பரப்பில் சாமந்தி சாகுபடி நடைபெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

காடையாம்பட்டியில் இருந்து நாள்தோறும்  பெங்களூரு, கோவை, திருப்பூர் உள்ளிட்ட மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் பூக்கள் அனுப்பப்படுகின்றன.

மணம் தரும் பூக்களை உற்பத்தி செய்த போதிலும், தங்களின் வாழ்க்கை உதிர்ந்த பூக்களைப் போலவே உள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

விளைச்சல் அமோகமாக உள்ளதால், தங்களுக்கு போதிய விலை கிடைக்கவில்லை என்று கூறும் விவசாயிகள், பூசாரிப்பட்டி பகுதியில் சென்ட் தொழில்சாலை அமைத்தால், தங்களுடைய விளைபொருளுக்கு உரிய விலை கிடைக்கும் என்றும், குளிர்சாதன வசதியுடன் கூடிய கிடங்கு அமைத்தால் பூக்களை இருப்பு வைத்து விற்பனை செய்ய முடியும் என்றும் தெரிவித்தனர்.

## 29 பேருக்கு கறவைமாட்டுக் கடன்

பொன்னமராவதி அருகே உள்ள இடையாத்தூரில் அம்மன்குறிச்சி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் சார்பில், 29 பேருக்கு கறவை மாட்டுக் கடன் சனிக்கிழமை வழங்கப்பட்டது.

விழாவிற்கு அம்மன்குறிச்சி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத் தலைவர் அ. பழனியப்பன் தலைமை வகித்தார். மத்திய கூட்டுறவு வங்கி கள மேலாளர் எ. ராஜேந்திரன் முன்னிலை வகித்தார்.

ஒன்றியக் குழுத் தலைவர் சி. அழகுசுப்பையா 29 பயனாளிகளுக்கு ரூ. 6.52 லட்சம் கறவைமாட்டுக் கடன் வழங்கினார். ஊராட்சித் தலைவர் அ. பெரியநாயகி, ஓரியண்டல் வளர்ச்சி அதிகாரி எஸ். குணசேகரன், சங்கச் செயலர் அ. செல்வம், ஊராட்சி துணைத் தலைவர் ராஜசேகர், அதிமுக முன்னாள் ஒன்றியத் தலைவர் பிஆர்சி. பழனியப்பன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## கும்பகோணத்தில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ. 2,500 விலை அறிவிக்க வலியுறுத்தி, கும்பகோணம் தலைமை அஞ்சலகம் முன் தஞ்சாவூர் மாவட்ட காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தினர் கையில் நெல் பயிர்களுடனும், நாமம் போடப்பட்ட அட்டையைக் கழுத்தில் அணிந்து கொண்டும் ஞாயிற்றுக்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

நெல்லுக்கு குவிண்டாலுக்குக் குறைந்தபட்ச நியாய விலையாக ரூ. 2,500 என மத்திய, மாநில அரசுகள் அறிவிக்க வேண்டும். நெல்லுக்கு கர்நாடகம், ஆந்திர மாநிலங்களில் ஊக்கத்தொகையாக குவிண்டாலுக்கு ரூ. 290 வழங்கப்படுவதுபோல, தமிழகத்திலும் வழங்க வேண்டும்.

தமிழகத்துக்கு மத்திய மின் தொகுப்பிலிருந்து மின்சாரம் கொண்டு வருவதற்கு கடந்த 2 ஆண்டுகளுக்கு மேலாக உரிய வழித்தட அனுமதி தர மறுப்பதால் கோடை சாகுபடி குறைகிறது. உடனடியாக மத்திய அரசு அனுமதி வழங்க வேண்டும்.

2013 ஆம் ஆண்டு சம்பா, தாளடி பயிர்களுக்குரிய காப்பீடு இழப்பு 10 மாதங்களுக்கு மேலாகியும் இதுவரை தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை. இதை உடனடியாக வழங்க வேண்டும்.

கோமாரியால் இறந்த கால்நடைகளுக்கு உரிய இழப்பீட்டை மாநில அரசு வழங்க வேண்டும். 2013 ஆம் ஆண்டு அரைவை செய்யப்பட்ட கரும்புக்கு மாநில அரசின் ஆதரவு விலை மற்றும் கால தாமத நிலுவைத் தொகைக்குரிய வட்டி சுமார் ரூ. 18 கோடியை தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள இரு தனியார் சர்க்கரை ஆலைகள் வழங்காமல் விவசாயிகளை ஏமாற்றிவருகின்றன.

எனவே, மாநில அரசு வருவாய் வசூல் சட்டத்தின்கீழ் அந்த ஆலைகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. தஞ்சாவூர் மாவட்ட காவிரி விவசாயிகள் பாதுகாப்புச் சங்கச் செயலர் சுவாமிமலை சுந்தர விமலநாதன் தலைமை வகித்தார். கும்பகோணம் வட்டத் தலைவர் கலியபெருமாள், துணைத் தலைவர் ராமநாதன், பாபநாசம் ஒன்றியச் செயலர் முருகேசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### வேளாண் இயந்திரக்குழு அமைக்க அழைப்பு

அரியலூர் மாவட்டத்தில் கிராமப்புற இளைஞர்களைக் கொண்ட வேளாண் இயந்திரக் குழு அமைக்கப்படவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் வெளியிட்ட செய்திக் குறிப்பு: அரியலூர் மாவட்டத்தில் வேளாண் பொறியியல் துறை மூலம் கிராமப்புற இளைஞர்கள் மற்றும் குறு, சிறு விவசாயிகள் 15 முதல் 16 நபர்களைக் கொண்ட வேளாண் இயந்திரக் குழு அமைக்கப்படவுள்ளது. இக்குழுவானது 4 உப குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குழுவுக்கும் பவர்டில்லர், நாற்றுநடும் இயந்திரம், மானாவாரி களையெடுக்கும் கருவி, நெல் களையெடுக்கும் கருவி, விதைப்புக் கருவி ஆகிய 5 இயந்திரங்கள் குழு மானியத்தில் வழங்கப்படும். இவ்வியந்திரங்களைப் பராமரிக்கவும், இயக்கவும், குழு உறுப்பினர்களுக்கு 10 நாள் பயிற்சியும் வழங்கப்படுகிறது.

இந்த வேளாண் இயந்திரக் குழு சங்கங்களின் சட்டப்படி பதிவு செய்யப்படும். இந்த வேளாண் கருவிகளை வாடகைக்கு கொடுத்து, அதன் மூலம் உறுப்பினர்கள் வருமானம் பெறலாம். இக்குழுவின் பெயரில் வரவு செலவினங்களை நிர்வாகம் செய்ய தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் சேமிப்புக் கணக்கு தொடங்கப்படும். வேளாண் இயந்திரங்களை குழு உறுப்பினர்களே இயக்க வேண்டும். அதன்மூலம் பெறப்படும் வாடகை வருவாய் அனைத்தும் இக்கணக்கில் செலுத்தப்படும். இது தொடர்பாக வேளாண்மை பொறியியல் துறையுடன் வேளாண் இயந்திரக் குழு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.

மேற்கண்ட நிபந்தனைகளுடன் அமைக்கப்படும் இக்குழுவின் உறுப்பினர்கள் 40 வயதுக்குள்பட்டவர்களாக இருக்க வேண்டும். குறைந்தபட்சம் 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்று, விவசாயப் பணியை மட்டுமே முழுநேரப் பணியாகக் கொண்ட ஊரக இளைஞர்கள், குறு, சிறு விவசாயியாக இருக்க வேண்டும். இக்குழுவில் சேர செந்துறை, அரியலூர், ஜயங்கொண்டம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம். குழு உறுப்பினர்கள் நேர்காணல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர். குழுவில் உறுப்பினர்களாகி பணி செய்ய விருப்பம் உள்ளவர்கள் வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்ட சிறு, குறு விவசாயி அல்லது முழு நேர விவசாயத் தொழிலாளி சான்றுடன் உதவிச் செயற்பொறியாளர், (வேளாண் பொறியியல் துறை), ஜோதிபுரம், சிதம்பரம் சாலை, ஜயங்கொண்டம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கலாம்.

## "கடலுக்குள் செல்லும் மீனவர் குறித்து மீன்வளத் துறையிடம் தெரிவிக்க வேண்டும்'

கடலுக்குள் செல்லும் மீனவர்கள் குறித்த விவரம் மீன் வளத் துறையிடம் தெரிவிக்கப்பட வேண்டும் என

மீனவர்களுக்கான ஆலோசனைக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

காரைக்கால் மீன்பிடித் துறைமுகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்த கூட்டத்துக்கு இந்திய கடலோரக் காவல் படையின் ஆய்வாளர் கதிரேசன் தலைமை வகித்து பேசியது:

மீனவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும்விதமாக, கிழக்கு மண்டல காவல் படையின் ரோந்துக் கப்பல் தினமும் காரைக்கால், நாகை, புதுக்கோட்டை உள்ளிட்ட கடல் பகுதிகளில் ரோந்தில் ஈடுபட்டு வருகிறது.

கடலுக்குள் மீனவர்கள் குழுவாக செல்ல வேண்டும். ஆபத்தில் சிக்கினால் கடலோரக் காவல்படைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். காரைக்கால் துறைமுகத்திலிருந்து கடலுக்கு புறப்படும்போதும், வந்துவிட்ட பிறகும் படகில் பயணித்த நபர்கள் குறித்த விவரம் மீன்வளத் துறைக்கு தெரிவிக்க வேண்டும். ஒவ்வொரு படகிலும் தேசியக் கொடி கட்டப்பட்டிருக்க வேண்டும். மேலும், ஜிபிஎஸ் கருவி, தற்காப்பு சாதனங்கள் இருக்க வேண்டும். எந்த காரணத்தை முன்னிட்டும், சர்வதேச எல்லையை மீனவர்கள் கடக்க கூடாது.  மீனவர்கள் மீன்வளத் துறை வழங்கிய புகைப்பட அடையாள அட்டை எடுத்துச் செல்ல வேண்டும் என்றார்.

எம்.எஸ். சுவாமிநாதன் அறக்கட்டளையின் ஒருங்கிணைப்பாளர் வேல்விழி, மீனவர்களுக்கு அறக்கட்டளையின் சார்பில் அளிக்கப்படும் சேவைகள் குறித்து விளக்கினார். காரைக்கால் கடலோரக் காவல்நிலைய உதவி ஆய்வாளர்கள் மோகன், குமரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## "முந்திரி ஆலைத் தொழிலாளர்களுக்கு கேரளத்துக்கு இணையான ஊதியம் வழங்க வேண்டும்'

குமரி மாவட்டத்திலுள்ள முந்திரி ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு கேரள முந்திரி ஆலைத் தொழிலாளர்களுக்கு இணையான ஊதியம் வழங்க வேண்டுமென கன்னியாகுமரி மாவட்ட பாரதிய முந்திரி ஆலைத் தொழிலாளர் சங்க மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இச்சங்கத்தின் இரண்டு நாள் மாநாடு குலசேகரத்தில் சனிக்கிழமை தொடங்கியது. முதல் நாள் நடைபெற்ற பிரதிநிதிகள் மாநாட்டுக்கு பாரதிய முந்திரி ஆலைத் தொழிலாளர் சங்கத் தலைவர் பி. பிரபகுமார் தலைமை வகித்தார். பொதுச்செயலர் ஆர். எஸ். வினோத் குமார் செயல் அறிக்கை சமர்ப்பித்தார்.

தீர்மானங்கள்: தமிழகத்தில் முந்திரி ஆலைத் தொழிலாளர்களின் கோரிக்கைகள் தொடர்பாக ஆலை நிர்வாகம், தொழிலாளர் துறை, தொழிலாளர் பிரதிநிதி என முத்தரப்பினர் பங்கேற்கும் பேச்சுவார்த்தை நடத்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முந்திரி ஆலைகளில் உள்ள பல பிரிவுகளில் 240 நாள்கள் பணிமுடித்த அனைத்து தொழிலாளர்களுக்கும் கேரள மாநிலத்தைப்போல் மாதாந்திர ஊதியம் வழங்க வேண்டும்.

உடைத்தல் பிரிவு தொழிலாளர்களுக்கு கிலோவுக்கு ரூ.22.36, தோல் நீக்கும் பிரிவு தொழிலாளர்களுக்கு கிலோவுக்கு ரூ. 28.44 வழங்க வேண்டும். சமையல் செய்யும் தொழிலாளர்களுக்கு தினக்கூலியாக ரூ. 350 வழங்க வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இஎஸ்ஐ மருத்துவமனையை உடனடியாக தொடங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முந்திரி ஆலைத் தொழிலாளர்களுக்கு வருங்கால வைப்பு நிதி மற்றும் இஎஸ்ஐ பிடித்தங்கள் முறையாக பிடித்தம் செய்யாமலும், பிடித்தம் செய்யப்பட்ட பங்குகளை அந்நிறுவனங்களுக்கு முறையாக செலுத்தாமலும் விதிமுறைகளுக்கு மாறாக ஆலை நிர்வாகங்கள் செயல்பட்டு வருவதை அதிகாரிகள் ஆய்வு செய்து முறைகேடுகளை தடுக்க வேண்டும்.

ஆலைகளுக்கு வெளியில் கொட்டகைகள் அமைத்து முந்திரி உடைப்பு நடைபெறுவதால் தொழிலாளர்களுக்கு வருங்கால வைப்பு நிதி, அகவிலைப்படி, இஎஸ்ஐ சலுகைகள் கிடைக்காமல் உள்ளன. இதுகுறித்து சம்பந்தப்பட்ட துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முந்திரி ஆலைத் தொழிலாளர்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காணும் வகையில் மாதாந்திர குறைதீர் கூட்டம் நடத்த வேண்டும். முந்திரி ஆலைத்தொழில் மூலம் மத்திய அரசுக்கு அன்னியச் செலாவணி கிடைப்பதால் இத்தொழிலை பாதுகாக்க மத்திய அரசு முன் வரவேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்படடன.

புதிய நிர்வாகிகள்: பிரதிநிதிகள் மாநாட்டில் தலைவராக பி. பிரபகுமார், துணைத் தலைவர்களாக சி. கேசவன், சி. லாசர், ஜி. தங்கராஜ், பொதுச்செயலராக ஆர்.எஸ். வினோத்குமார், செயலர்களாக கே. சுனில்குமார், ஜே. கிரிஜா, எம்.எஸ். மணிகண்டன், பொருளாளராக வி. திவாரகன் பிள்ளை, அமைப்பாளராக கே.விஸ்வநாதன் மற்றும் 16 பேர் செயற்குழு உறுப்பினர்களாக தேர்வு செய்யப்பட்டனர்.

பேரணி, பொதுக்கூட்டம்: மாநாட்டின் நிறைவு நாளான ஞாயிற்றுக்கிழமை செருப்பாலூர் முத்தாரம்மன் கோயில் அருகிலிருந்து திரளான பெண் தொழிலாளர்கள் பங்கேற்ற பேரணியும், அரசுமூடு சந்திப்பில் பொதுக்கூட்டமும் நடைபெற்றது.

பொதுக்கூட்டத்துக்கு பாரதிய முந்திரி ஆலைத் தொழிலாளர் சங்கத் தலைவர் பி. பிரபகுமார் தலைமை வகித்தார். பிஎம்எஸ் மாவட்ட துணைத் தலைவர்கள் டி. வேலுதாஸ், சி. சண்முகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பிஎம்எஸ் ஒன்றியச் செயலர் ஜி. தர்மராஜ் வரவேற்றார். கேரள மாநில முந்திரி ஆலைத் தொழிலாளர் சங்க பொதுச்செயலர் பி. சிவஜி சுதர்சன், பிஎம்எஸ் மாநிலச் செயலர் கே. முருகேசன், மாவட்டத் தலைவர் எஸ். குமாரதாஸ், பாரதிய முந்திரி ஆலை தொழிலாளர் சங்க பொதுச்செயலர் ஆர்.எஸ். வினோத்குமார் உள்ளிட்டோர் பேசினர்.

**பால் விற்பனை விலையில் முரண்பாடு: நாளை பேச்சுவார்த்தை**

குமரி மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களில் பால்விற்பனை விலையில் உள்ள முரண்பாடுகளை களைய செவ்வாய்க்கிழமை (ஜன.7) பேச்சுவார்த்தை நடைபெறுகிறது.

ஜனவரி 1-ம் தேதி முதல் பால்கொள்முதல் விலையை லிட்டருக்கு ரூ. 6 ஆக உயர்த்தி அரசு உத்தரவிட்டது. ஆனால் மக்களுக்கு விற்பனை செய்யப்படும் பாலின் விலையில் எந்த மாற்றமும் இல்லை என அரசு தெரிவித்திருந்தது. இதன்படி மாவட்டத்தில் உள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களில்

கொள்முதல் விலை உயர்த்தப்பட்டது. ஆனால் சில ஒன்றியங்களில் பால் விற்பனை விலையும் அதிகரிக்கப்பட்டது.

ரூ.22-க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு லிட்டர் பால் விலை ரூ.28-க்கு விற்பனை செய்யப்படுவதாக புகார் எழுந்தது. இந்த விலை முரண்பாட்டால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது. இதையடுத்து குமரி மாவட்டத்தில் உள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றிய நிர்வாகிகளை அழைத்துப் பேச முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து குமரி மாவட்ட பால்வளத் தலைவர் எஸ்.ஏ.அசோகன்

கூறியதாவது: மாவட்டத்தில் 54 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் உள்ளன. சில கூட்டுறவு ஒன்றியங்கள் பால் விற்பனை விலையை உயர்த்தி உள்ளதாக புகார்கள் வந்துள்ளன.

இதுகுறித்து அந்த ஒன்றியங்களுடன் பேசப்பட்டுள்ளது. எனினும் பால் விலை முரண்பாட்டை தவிர்க்க அனைத்து ஒன்றிய நிர்வாகிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான கூட்டம் நாகர்கோவிலில் உள்ள ஆவின் அலுவலகத்தில் ஜனவரி 7-ம் தேதி காலை 10 மணிக்கு நடைபெறுகிறது என்றார் அவர்.

### மரக்காணத்தில் மீன்பிடி தொழில் பாதிப்பு

மரக்காணத்தில் காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் காரணமாக கடந்த இரு தினங்களாக மீன்பிடி தொழில் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து சென்னையில் இருந்து மீன்கள் மரக்காணத்துக்கு விற்பனைக்காக கொண்டுவரப்பட்டுள்ளன.

விழுப்புரம் கடலோரப் பகுதிகளான அழகன்குப்பம், வசவன்குப்பம், கைப்பாணிக்குப்பம், எக்கியார்குப்பம், புதுக்குப்பம், அனுமந்தைகுப்பம், கூனிமேடுகுப்பம், முதலியார்குப்பம் உள்ளிட்ட 19 மீனவ குப்பங்கள் உள்ளன.

இங்கிருந்து பிடிக்கப்படும் மீன்கள் புதுச்சரி, மரக்காணம், திண்டிவனம், செஞ்சி உள்ளிட்ட மீன் மார்க்கெட் பகுதிகளுக்கு கொண்டு செல்லப்படுகின்றன.

வங்கக் கடலில் உருவான காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் காரணமாக மரக்காணம் கடல் பகுதி சற்று சீற்றத்துடன் காணப்படுகிறது.

இதனால் மீனவர்கள் பலர் கடலுக்குச் செல்லவில்லை. மேலும் அலையின் சீற்றம் அதிகமாகி படகுகள் இழுத்துச் செல்லப்படுவதை தடுக்க படகுகளை மேட்டுப் பகுதியில் மீனவர்கள் நிறுத்தியுள்ளனர்.

மீன்கள் பற்றாக்குறையைத் தடுக்க மரக்காணம் பகுதிக்கு, சென்னை காசிமேடு பகுதியில் இருந்து மீன்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. அதேபோல் திண்டிவனம், செஞ்சி உள்ளிட்ட மார்கெட் பகுதிகளுக்கும் புதுச்சேரி மற்றும் வெளியூர்களில் இருந்தே மீன்கள் கொண்டு வரப்படுகின்றன.

இதனால் மீன்கள் விலை உயரும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்றனர் வியாபாரிகள்.

**கறிக் கோழி வளர்ப்புக் கூலியை அரசே நிர்ணயிக்கக் கோரிக்கை**

கோழி வளர்ப்புக்கான கூலியை அரசே நிர்ணயம் செய்ய வேண்டும் என்று விழுப்புரத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள் சங்கத்தின் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

இம் மாநாட்டுக்கு மாநிலத் தலைவர் ஜி.லதா தலைமை வகித்தார். மாநாட்டு வரவேற்பு குழு தலைவர் ஆர்.ராமமூர்த்தி வரவேற்றார். தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநில தலைவர் கே.பாலகிருஷ்ணன் பேசினார்.

தமிழ்நாடு கோழி வளர்ப்பு விவசாயிகளின் கூலியை அதிகரித்து வழங்க வேண்டும், கோழி வளர்ப்புக்கு மானியத்துடன் வங்கிக் கடன் வழங்க வேண்டும், தானே புயலால் பாதிக்கப்பட்ட கோழிப் பண்ணைகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும், கோழி வளர்ப்புக்கான கூலியை அரசே நிர்ணயம் செய்ய வேண்டும்

உள்ளிட்ட தீர்மானங்கள் இம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

### 147 இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள்

சம்பா அறுவடை தொடங்கவுள்ள நிலையில், கடலூர் மாவட்டத்தில் 147 இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக அதிகாரிகள் தெரிவித்தது: கடலூர் மாவட்டத்தில் சிதம்பரம், காட்டுமன்னார்கோவில், குறிஞ்சிப்பாடி, விருத்தாசலம், பண்ருட்டி, கடலூர் மற்றும் திட்டக்குடி வட்டங்களில் இந்த நெல் கொள்முதல் நிலையங்கள் தொடங்கப்படவுள்ளன.

பெங்கல் பண்டிகை முடிந்தவுடன் அறுவடை பணிகள் முழுவீச்சில் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுவதால், இதற்கு முன்பு நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படவுள்ளன.

சிதம்பரம் வட்டத்தில் அகர ஆலம்பாடி, சி.ஆலம்பாடி, அம்பாள்புரம், அருண்மொழிதேவன், ஆதிவராகநத்தம், எறும்பூர், கண்ணன்குடி, கரைமேடு, காட்டுக்கூடலூர், கீரப்பாளையம், கிள்ளை, பி.முட்லூர், சி.முட்லூர், நாஞ்சலூர், டி.நெடுஞ்சேரி, சாத்தப்பாடி, செங்கல்மேடு, சேத்தியாதோப்புகுறுக்குரோடு, சிவபுரி, தண்டேஸ்வரநல்லூர், துணிசிரமேடு, உசுப்பூர், வடதலைக்குளம், வளையமாதேவி, வல்லம்படுகை, வாழக்கொல்லை, வீரமுடையான்நத்தம், விளாகம், புதுச்சத்திரம்.

காட்டுமன்னார்கோவில் வட்டத்தில் ஆனந்தகுடி, எடையார், எள்ளேரி, எய்யலூர், கண்டமங்கலம், கஞ்சன்கொல்லை, காட்டுமன்னார்கோவில், கீழ்கடம்பூர், மா.உடையூர், மேலக்கடம்பூர், மோவூர், ஓமாம்புலியூர், ரெட்டியூர், சிறுகாட்டூர், தில்லைநாயகபுரம், குணவாசல், திருநாரையூர், வாண்டையார்இருப்பு, குமராட்சி, அம்புஜவல்லிபேட்டை, ஆயங்குடி, லால்பேட்டை, கள்ளிப்பாடி, ஸ்ரீமுஷ்ணம், ஸ்ரீநெடுஞ்சேரி, முட்டம், குச்சூர், மதகளிர்மாணிக்கம், அத்திப்பட்டு, நாச்சியார்பேட்டை.

கடலூர் வட்டத்தில் தூக்கணாம்பாக்கம், களையூர், சி.என்.பாளையம். பண்ருட்டி வட்டத்தில் புலவனூர், பைத்தாம்பாடி, வீரபெருமாநல்லூர். குறிஞ்சிப்பாடி வட்டத்தில் ஆடூர்அகரம், வரதராஜன்பேட்டை, குறிஞ்சிப்பாடி, கருவேப்பம்பாடி, குண்டியமல்லூர், கொளக்குடி, புதுரங்காநாதபுரம்.

விருத்தாசலம் வட்டத்தில் சி.கீரனூர், காவனூர், மேலப்பாளையம், ராஜேந்திரப்பட்டினம், கொடுமானூர், கோபாலபுரம், கருவேப்பிலங்குறிச்சி. திட்டக்குடி வட்டத்தில் கிளிமங்கலம், டி. இளமங்கலம், சாத்தநத்தம், கொட்டாரம், தாழநல்லூர், தொளார், மருதத்தூர், சிறுமுளை, வையங்குடி, கோடங்குடி, கீழக்கல்பூண்டி, சிறுபாக்கம், தொழுதூர், பெண்ணாடம் ஆகிய இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படவுள்ளன.

ஏ கிரேடு நெல் ரூ.1,345 உடன் ஊக்கத்தொகை ரூ.50 சேர்த்து ரூ.1,415-க்கும், பொது ரக நெல் ரூ.1,310 உடன் ஊக்கத்தொகை ரூ.50 சேர்த்து ரூ.1,360-க்கும் கொள்முதல் செய்யப்படும். கொள்முதல் செய்யப்படும் நெல் அளவு 50 கிலோ. சாக்குகளில் நிகர எடை 40 கிலோவுடன் சாக்கு எடை 0.665 கிராமுடன் சேர்த்து மொத்த எடையாக 50 கிலோ 665 கிராம் இருக்க வேண்டும்.

கொள்முதல் செய்யப்படும் நெல்லில், அதிகபட்சமாக கனிமபொருள்களும், கரிமபொருள்களும் ஒரு சதவீதமும், சேதமடைந்தது, நிறம்மாறியது, முளைகண்டது, பூச்சிதுளைத்தது என அதிகபட்சமாக 4 சதவீதமும், முதிராதது, சுருங்கியது மற்றும் மடிப்பு விழுந்த தானியங்கள் அதிகபட்சமாக 3 சதவீதமும், கீழ்நிலைக்கலவை 6 சதவீதத்திற்குள்ளும், ஈரப்பதம் அதிகபட்சமாக 17 சதவீதத்திற்குள்ளும் இருக்க வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

முட்டை விற்பனை 20 சதவீதம் அதிகரிப்பு : நிக் மண்டல தலைவர் தகவல்

நாமக்கல்: புதிய நடைமுறையால், 20 சதவீதம் முட்டை விற்பனை அதிகரித்துள்ளது என, கருத்தரங்கில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு மண்டலத் தலைவர் பேசினார். நாமக்கல் தெற்கு பகுதி கோழிப் பண்ணையாளர் கருத்தரங்கு, அணியாபுரம் அடுத்த தோளூரில், நேற்று நடந்தது. இதில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு மண்டலத் தலைவர், செல்வராஜ் பேசியதாவது: ஜனவரி, 1ம் தேதி முதல், நிக் நிர்ணயிக்கும் விலைக்கே, அனைத்து கோழிப் பண்ணையாளர்களும், முட்டையை, வியாபாரிகளுக்கு விற்பனை செய்ய வேண்டும் என, அறிவுறுத்தப்பட்டது. அதற்கு, பெரும்பாலான பண்ணையாளர்கள் வரவேற்பு அளித்தனர். இந்த புதிய முறையை அமல்படுத்தியதால், தற்போது, 20 சதவீதம் வரை, முட்டை விற்பனை அதிகரித்துள்ளது. அதேபோல், தீவனத்தின் தேவையும் குறைந்துள்ளது. புதிய முறை நடைமுறையால், நாமக்கல் மண்டலத்தில், 3.60 காசுகளுக்கு ஒரு முட்டை விற்பனை செய்யப்படுகிறது. இதனால், பண்ணையாளர்களுக்கு, 15 காசுகள் கூடுதலாக கிடைக்கிறது. கேரளாவில், முட்டைக் கோழிகளை, பிரியாணிக்கு பயன்படுத்துகின்றனர். நாமும் இங்கு, அவற்றை, பிரியாணிக்கு பயன்படுத்த, விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.இவ்வாறு, அவர் பேசினார்.

தமிழகத்தில் கறிக்கோழி விலை கிடுகிடு உயர்வுதமிழகத்தில், பிராய்லர் கோழி விலையில் ஏற்பட்டுள்ள உயர்வை அடுத்து, நாட்டுக் கோழி மற்றும் ஈமு கோழியின் விலையிலும், உயர்வு ஏற்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்டம் : தமிழகத்தில், பிராய்லர் கறிக்கோழிகள், பல்லடம்,

உடுமலைப்பேட்டையை அடுத்து, நாமக்கல் மாவட்டத்தில், அதிக அளவில் வளர்க்கப்படுகிறது. கடந்த, நவம்பர் முதல், தமிழகத்தில் இருந்து, கேரளாவுக்கு கொண்டு செல்லப்பட்ட, கறிக்கோழிகளுக்கு, அம்மாநில அரசு, கெடுபிடிகளை அதிகரித்ததால், பிராய்லர் கறிக்கோழிகள், தமிழகத்தில், பெரும் அளவு தேக்கம் அடைந்தது. இதனால், இக்கோழிகளின் விலையில், கடும் வீழ்ச்சி ஏற்பட்டது. டிசம்பர் முதல் வாரத்தில், பிராய்லர் கோழி, உயிருடன், கிலோ, 45 ரூபாய்க்கும், அதன் கறி, கிலோ, 70 ரூபாய் வரையிலும் விற்கப்பட்டு, வரலாறு காணாத சரிவை சந்தித்தது.

அதன் பின், டிசம்பர் கடைசி வாரம் முதல், கறிக்கோழியின் விலையில், படிப்படியாக உயர்வு ஏற்பட்டு, தற்போது, மீண்டும் உச்சத்தை தொட்டுள்ளது. நேற்றைய நிலவரப்படி, கறிக்கோழி, உயிருடன், கிலோ, 95 - 110 ரூபாயாகவும், கறி கிலோ, 140 - 160 ரூபாயாகவும் விற்பனை செய்யப்பட்டது.

கோழி விலை உயர்வு : கறிக்கோழியின் விலை யில் உயர்வு ஏற்பட்டதை அடுத்து, நாட்டுக் கோழியின் விலையிலும் உயர்வு ஏற்பட்டுள்ளது. நாட்டுக் கோழி, கடந்த மாதம், உயிருடன், கிலோ, 270 ரூபாய்க்கும், கறி கிலோ, 320 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. ஆனால், நேற்று முதல், உயிருடன், கிலோ, 320 ரூபாய்க்கும், கறி, கிலோ, 350 - 380 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது.

மேலும் உயரும் : பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, நாட்டுக்கோழியின் விலை மேலும் உயரும் என

எதிர்பார்க்கப்படுகிறது. ஈமுக் கோழிக் கறியின் விலையிலும் உயர்வு ஏற்பட்டுள்ளது. கடந்த மாதம், ஈமுக் கோழிக் கறி, கிலோ, 80 - 100 ரூபாய் விற்றது; தற்போது, கிலோ, 100 - 120 ரூபாயாக உயர்ந்துள்ளது.

**மேலூரில் தண்ணீர் இன்றி கருகும் நெற்பயிர் கடைமடை விவசாயிகள் கண்ணீர்**



மேலூர்:மதுரையின் கடைமடை பாசனமான மேலூரில், கருகிய நெற்பயிர்களை கண்டு வாடும் விவசாயிகள் கண்ணீர் சிந்துகின்றனர். சாவியாகிப்போன பயிர்களை கால்நடை தீவனத்துக்காக அறுவடை செய்யும் அவலமும் தொடர்கிறது.

மதுரையில் இரண்டு ஆண்டுகளாக போதிய மழை இல்லை. இதனால், நீர்நிலைகள் வறண்டன. விவசாயத்திற்கு வழியின்றி விவசாயிகள் கவலையில் மூழ்கினர். 2013ல் செப்டம்பரில் ஓரளவு மழை பெய்ததால், பெரியாறு அணை நீர்மட்டம் உயர்ந்தது.

நீர்நிலைகள் நிரம்பின. மழையையும், அணை நீரையும் நம்பி மதுரையில் கடைமடை பகுதியான மேலூரில் 12.500 ஏக்கர் நிலத்தில் ஒருபோகத்துக்கான நெல் பயிரிடப்பட்டது. அணை நீர் இருப்பை கணக்கிட்டு 2013 நவ.,23ல் தண்ணீர் திறந்து விடப்பட்டது.

அணை நீர், மேலூரில் இ.மலம்பட்டியில் உள்ள எரிச்சி மற்றும் குறிச்சி கண்மாய்களை அடைய வேண்டும். இம்முறை திறந்து விடப்பட்ட அணை நீர் பற்றாக்குறை காரணமாகவும், கிரானைட் குவாரிகள் கைங்கரியத்தாலும் துார்ந்து போன மற்றும் அழிக்கப்பட்ட வரத்து கால்வாய்கள் வழியாக தண்ணீர் செல்லாததாலும் எரிச்சி, குறிச்சி கண்மாய்களுக்கு வந்து சேரவில்லை.

இதனால், அணை நீரை நம்பிய விவசாயிகளுக்கு சோகமே மிஞ்சியது. 70 முதல் 75 நாட்கள் விளைந்த கதிர்களில் பால் பிடித்த நிலையில் தண்ணீர் இன்றி சருகாகி கருகி வருகிறது.

தர்மலிங்கம், ஊராட்சி தலைவர்,

கீழவளவு: பெரியாறு அணை நீர் 10 நாள், 40 நாள், 15 நாள் என மூன்று கட்டமாக

திறந்து விடப்பட்டது. இதில், மேலூார் 8வது கால்வாய் வழியாக வரும் அணை நீர் இ.மலம்பட்டி பகுதியை தொடவில்லை. இதனால், அணை நீரை நம்பி நெல் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு பெரும் அடி விழுந்துள்ளது. குடி நீருக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சாவியான பயிர்களை கால்நடை தீவனத்துக்காக அறுவடை செய்கின்றனர்.

சுப்பையா, விவசாயி, சூரக்குண்டு: இப்பகுதியில் 300 ஏக்கரில் பயிரிடப்பட்ட நெல் கருகி விட்டது. ஒரு போகத்துக்கே வழியில்லை. 75 நாள் வளர்ந்த பயிர்களை காப்பாற்ற குறைந்தபட்சம் இரண்டு முறை தண்ணீர் விட வேண்டும். அதற்கும் வழியில்லை, என தோன்றுகிறது. நிலத்தடி நீர் கீழ் மட்டத்துக்கு சென்றதால் கிணறுகள் வறண்டு விட்டன. விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

செல்வராணி, விவசாயி, கீழவளவு: அணை நீரை நம்பி மூன்று ஏக்கரில் நெல் விதைத்தேன். நாற்று, உரம், பூச்சி கொல்லி மருந்து, வரத்து வெட்டுக்கூலி, நாற்று நடவு என ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் வரை செலவு செய்தேன். கைக்கு மேல் பலன் கிடைப்பதற்குள் தண்ணீர் இன்றி கண் முன்னே பயிர்கள் கருகி விட்டன. அவற்றை காப்பாற்ற வழியில்லாமல் போனது. கையிருப்பு முழுவதையும் நிலத்தில் போட்டு விட்டேன். நஷ்டம் ஏற்பட்டதால் பிழைப்புக்கு என்ன செய்வது என தெரியவில்லை.மேலூாரில் கிரானைட் குவாரிகளின் வருகைக்கு முன் சுமார் 40 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் நெற் சாகுபடி செய்யப்பட்டன. பெரியாறு அணையில் நீர் இருப்பு 116 அடியாக இருந்தபோது கூட தொடர்ந்து பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. கிரானைட் குவாரிகள் ஆக்கிரமிப்பால் பல கண்மாய்களும், வரத்து கால்வாய்களும் அழிந்தன. தற்போது 20 ஆயிரம் ஏக்கர் வரை பிளாட்டுகளாக காணப்படுகிறது. எனவே, விவசாய நிலம் பாதியாக குறைந்தபோதும், தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டு விவசாயிகளின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி வருவது வருந்தத்தக்கது. விவசாயிகளின் நலன் கருதி கருகிய நெற்பயிர்களுக்கு உரிய நஷ்டஈடு வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தண்ணீர் திறக்க மாஜி கலெக்டர் கோரிக்கை: மதுரை முன்னாள் கலெக்டரும், பி.ஜே.பி., கட்சி பிரமுகருமான சந்திரலேகா விடுத்துள்ள அறிக்கை:

பெரியாறு பாசன வசதி பெறும் மேலுார் பகுதி விவசாயிகளுக்கு தண்ணீர் திறப்பதில் பாரபட்சம் காட்டப்படுகிறது. போதுமான தண்ணீர் விடாததால், விளைச்சல் பாதிக்கப்பட்டு, இதுவரை 4 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.மேலுார் கடை மடை பகுதி முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளது. தற்போது பெரியாறு அணையில் 114 அடி தண்ணீர் உள்ளது. இதில் குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு, 108 அடி வரை தண்ணீர் திறக்கலாம். இன்னும் ஐந்து நாட்களுக்கு தண்ணீர் விட்டால், விவசாயம் முழுமை அடையும். தமிழக அரசு உடனடியாக தண்ணீர் திறக்க உத்தரவிட வேண்டும் என தெரிவித்துள்ளார்.

## கோடை தரிசில் சாகுபடி

தேனி:தேனி அருகே உள்ள சீலையம்பட்டியில், கோடையில் நெல் தரிசில் பயறு வகைகள் உற்பத்திக்கான சிறப்பு அணுகுமுறைகள் குறித்த முனைப்பு முகாம் நடந்தது.

வேளாண்மை இயக்குனர் ராஜேந்திரன் தலைமை வகித்தார்.

இணை இயக்குனர் சுந்தரம் வரவேற்று பேசினார். கோடை பருவத்தில் விவசாயிகள் தரிசாக விடாமல், குறைந்த செலவில் அதிக வருமானம் தரக்கூடிய பயறு வகை பயிர்கள் சாகுபடி செய்யலாம், என அறிவுறுத்தப்பட்டது. வேளாண் துணை இயக்குனர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் விவசாயிகள் பங்கேற்றனர். உதவி இயக்குனர் முத்துலட்சுமி நன்றி கூறினார்.

## விருதையில் பூ மார்க்கெட் அமைப்பது... போதிய லாபமின்றி விவசாயிகள் விரக்தி

சிறுபாக்கம் :விருத்தாசலத்தில் பூ மார்க்கெட் அமைப்பது கிடப்பில் போடப்பட்டதால், பூக்களுக்கு போதிய விலை கிடைக்காமல் விவசாயிகள் விரக்தியடைந்துள்ளனர்.

மங்களூர், நல்லூர் ஒன்றியங்களில் வேப்பூர், சேப்பாக்கம், நகர், நிராமணி, பூலாம்பாடி, ஆதியூர், அரியநாச்சி, கழுதூர், அடரி, சிறுபாக்கம், ஈரியூர், கீழ்ஒரத்துார், கொளவாய், அரசங்குடி, மாங்குளம் உட்பட 100க்கும் மேற்பட்ட கிராமங்களில் விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது.இங்கு நான்கில் மூன்று பங்கு மானாவாரி நிலமாக உள்ளதால், மீதமுள்ள ஒரு பங்கு நிலத்தில் மட்டுமே

கிணற்று பாசனம் மூலம் கரும்பு, நெல், வேர்க்கடலை, மஞ்சள், மரவள்ளி பயிரிடப்படுகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளாக பருவநிலை மாற்றம், போதிய மழையின்மை, மின் வெட்டு, கூலி ஆட்கள் தட்டுப்பாடு, உரம் விலை உயர்வு போன்ற காரணங்களால் பயிர் செய்ய விவசாயிகள் மிகுந்த சிரமம் அடைந்தனர்.

இங்கு அறுவடை செய்யும் பூக்களை விவசாயிகள் விழுப்புரம், கள்ளக்குறிச்சி, சேலம் மாவட்டம், தலைவாசல் பகுதி வியாபாரிகளிடம் விற்று வருகின்றனர். போக்குவரத்து செலவு உள்ளிட்ட காரணங்களால் விவசாயிகளுக்கு போதிய லாபம் கிடைக்கவில்லை.இதனால் விருத்தாசலத்தில் பூ மார்க்கெட் அமைக்க வேண்டுமென இப்பகுதி விவசாயிகள், மாவட்ட நிர்வாகத்திடம் பல ஆண்டுகளாக கோரிக்கை விடுத்து வந்தனர்.

கடந்த 2008ல் அப்போதைய கலெக்டர் சீத்தாராமன், விருத்தாசலத்தில் பூ மார்க்கெட் அமைக்கவும், அதிகாலையில் விவசாயிகள் பூ பறிக்க ஏதுவாக மானியத்தில் நெற்றி விளக்கு மற்றும் பூங்கன்றுகள், உரம் உள்ளிட்ட உதவிகள் வழங்க உத்தரவிட்டார். ஆனால் பூ மார்க்கெட் அமைப்பது கடந்த ஐந்து ஆண்டுகளாக கிடப்பில் போடப்பட்டுள்ளது.இந்நிலையில் மங்களூர், நல்லூர் ஒன்றிய கிராமங்களில் நடப்பாண்டு கிணற்று பாசனம் மூலம் 600 ஏக்கருக்கு மேல் சம்பங்கி, மல்லிகை, சாமந்தி, கோழிக்கொண்டை, டில்லி கனகாம்பரம், ரோஸ் உள்ளிட்ட பல ரக பூக்களை விவசாயிகள் பயிர் செய்துள்ளனர்.தற்போது அறுவடை துவங்கியுள்ள நிலையில், பூக்களை விழுப்புரம், சேலம் மாவட்ட வியாபாரிகளுக்கு அனுப்புவது தொடர்கிறது. இதனால் கூடுதல் செலவு ஆவதுடன், பூக்களை அனுப்ப போதிய போக்குவரத்து வசதியும் இல்லாததால் விவசாயிகள் மிகுந்த சிரமம் அடைகின்றனர்.எனவே, விருத்தாசலத்தில் பூ மார்க்கெட் அமைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## கரும்பு வெட்டுக்கூலியை ஆலை ஏற்க கோரிக்கை

உத்திரமேரூர்:'கரும்பு வெட்டுக்கூலியை ஆலை நிர்வாகம் முழுமையாக ஏற்க வேண்டும்' என, கரும்பு விவசாயிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.
காஞ்சிபுரம் மாவட்டத்தில், உத்திரமேரூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட அரும்புலியூர், திருப்புலிவனம், களியாம்பூண்டி உள்ளிட்ட குறுவட்டங்களில் உள்ள கிராம பகுதிகளில், ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் கரும்பு பயிர் செய்யப்படுகிறது.
போதவில்லை அறுவடை செய்யும் கரும்புகளை, வாலாஜாபாத் அடுத்த சங்கராபுரம், ஸ்ரீபத்மாவதி தனியார் சர்க்கரை ஆலை மற்றும் படாளம் கூட்டுறவு சர்க்கரை ஆலை nகளுக்கு விவசாயிகள் விற்று  வருகின்றனர்.
தற்போது, கரும்பு விலை டன்னுக்கு 400 ரூபாய் உயர்த்தி இருந்தாலும், அது போதுமானது இல்லை என விவசாயிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.
இதுகுறித்து, சாத்தணஞ்சேரி கரும்பு விவசாயி, சிவராமன் கூறுகையில், "கரும்பு வெட்டும் தொழிலாளர் நபர் ஒருவருக்கு, (நாளொன்றுக்கு) 550 ரூபாய்க்கும், கரும்பு கத்தை துாக்குவோருக்கு, 150 ரூபாய்க்கும் என, கூலி உயர்த்தி வழங்கப் படுகிறது. இதனால், வெட்டுக்கூலியே, 40 சதவீதம் போக, நிலத்தை உழுது பண்படுத்துவதில் இருந்து, விதை வாங்குதல், நடவு செய்தல், களை எடுத்தல், கரும்பு வெட்டி ஏற்றுமதி செலவு உட்பட ஏக்கருக்கு, 1 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. ஆனால், ஒரு ஏக்கர் கரும்புக்கு, 1 லட்சம் ரூபாய் வரை மட்டுமே கிடைக்கிறது. எனவே, உற்பத்தி செலவைக் கூட ஈடுகட்ட முடியாததாக உள்ளது," என கூறினார். பேச்சு வார்த்தை தமிழ்நாடு விவசாயிகள் சங்கச் செயலர் பெருமாள் கூறுகையில், "கரும்பு டன்னுக்கு, 3,500 வரை உயர்த்தி வழங்க வேண்டும் என, விவசாயிகள் சார்பில் வலியுறுத்தப்பட்டு வந்தது.
தற்போது, மத்திய அரசு டன்னுக்கு, 2,350 ரூபாயில் இருந்து 400 உயர்த்தியது. ஆனால், மாநில அரசு, 100 ரூபாய் குறைத்து, டன்னுக்கு, 2,650 ரூபாய் வழங்குகிறது. எனவே, கரும்பு விவசாயிகள் பிரச்னைக்கு தீர்வு காணும் வகையில், வெட்டுக்கூலியை ஆலை நிர்வாகம் ஏற்பது குறித்து, முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்," என்றார்.

## நெல் கொள்முதல் நிலையங்கள் தேவைவிவசாயிகள் சங்கத்தினர் கோரிக்கை

ஈரோடு: தமிழக விவசாயிகள் சங்க, ஈரோடு மாவட்ட கூட்டம், மாவட்ட தலைவர் குமாரசாமி தலைமையில் நடந்தது. மாநில தலைவர் ரத்தினசாமி, மாவட்ட செயலாளர் சுப்பு, பொருளாளர் லட்சுமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.தமிழக அரசு பால் கொள்முதல் விலையை உயர்த்தி இருந்தாலும், அது போதுமானதாக இல்லை. எருமை பாலுக்கு, 10 ரூபாய், மாட்டு பாலுக்கு, 5 ரூபாய் உயர்த்தி வழங்க, முத்தரப்பு கூட்டம் கூட்டி நடவடிக்கை எடுக்க வேண்டும். கொள்முதல் விலை உயர்த்தப்பட்டு, விற்பனை விலை உயர்த்தப்படாததால் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கமும், ஒன்றியமும் பெரும் இழப்பை சந்திக்க வேண்டியுள்ளது.இழப்பு திரும்பவும் பால் உற்பத்தியாளர்களுக்கே பாதிப்பை ஏற்படுத்தும். பால் உற்பத்தி மற்றும் கூட்டுறவு அமைப்புகள் இழப்பால் அழியும் சூழல் உள்ளது. எனவே பால் விற்பனை விலையை, கொள்முதல் விலைக்கு மேல் உயர்த்திட வேண்டும், அல்லது அரசு மானியம் வழங்க வேண்டும்.எல்.பி.பி., பாசன பகுதியில் நெல் அறுவடை துவங்கி உள்ளதால், கடந்தாண்டு அமைக்கப்பட்ட அனைத்து இடங்களிலும், உடனடியாக நெல் கொள்முதல் நிலையங்கள், அமைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.எல்.பி.பி., பாசன திட்டத்தில், இரண்டாம் மண்டலத்துக்கு, கடந்த மூன்று ஆண்டுகளாக பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்படவில்லை. தற்போது, 18 டி.எம்.சி., அளவுக்கு தண்ணீர் உள்ளது. எனவே, நிலக்கடலை பாசனத்துக்கு தண்ணீர் திறக்க வேண்டும்.கரும்பு விவசாயிகளுக்கு, நியாயமான விலை கிடைக்க மத்திய அரசு, நிலையான கொள்கை முடிவு எடுத்து, உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கும்போது, வெளிநாட்டு சர்க்கரை இறக்குமதியை தடை செய்வதுடன், உபரியான சர்க்கரையை, ஏற்றுமதி செய்ய, நிலையான கொள்கை முடிவு எடுத்து, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும், என்பது உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## பயிரை பாதுகாக்க தண்ணீர் பாய்ச்சல்

கோத்தகிரி:கோத்தகிரியில் ஏற்பட்டுள்ள வறட்சியின் காரணமாக, தண்ணீர் வரத்து குறைந்துள்ளதால், பயிரை பாதுகாக்க, விவசாயிகள் தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர்.

நீலகிரி மாவட்டத்தில் பகலில் வெயிலும், இரவு மற்றும் அதிகாலை நேரங்களில் பனிப்பொழிவான கால நிலை நிலவுகிறது. இதனால், தாழ்வான பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள தேயிலை மற்றும் மலைக்காய்கறி பயிர்கள் பனியால் கருகி வருகின்றன. மேலும், நீர் ஆதாரமுள்ள நிலங்களில் காரட்,பீட்ரூட், முள்ளங்கி, பீன்ஸ் மற்றும் உருளைக் கிழங்கு உள்ளிட்ட மலைக்காய்கறி சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவைகள் பனியால் பாதிக்காமல் இருக்க,"பம்ப் செட்' மற்றும் ஸ்பிரிங்லர் மூலம், தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர்.

## விவசாயிகளுக்கு கடன்ரூ.4.66 கோடி வழங்கல்

குளித்தலை: விவசாயிகள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு, 4.66 கோடி கடன் உத்தரவு வழங்கப்பட்டது.ஐ.ஓ.பி., வங்கியின் திருப்பூர் மண்டலத்தின் சார்பில் விவசாயிகள் மற்றும் சுயஉதவிக்குழுவினருக்கு கடன் வழங்கும் விழா, குளித்தலை அண்ணா சமுதாய மன்றத்தில் நடந்தது. இதில் குளித்தலை யூனியன் தலைவர் நளினி தலைமை வகித்தார். குளித்தலை ஐ.ஓ.பி., கிளை மேலாளர் பாஸ்கரன் முன்னிலை வகித்தார்.பின் ஐ.ஓ.பி., மண்டல மேலாளர் நரசிம்மன், 145 பயனாளிகளுக்கு, 4.66 கோடி ரூபாய் கடன் உதவிக்கான உத்தரவை வழங்கினார். விழாவில் முன்னோடி வங்கி மேலாளர் முருகேசன், கிளை மேலாளர்கள் பாபுசந்த, பெருமாள், ரவி, சரவணகுமார், உட்பட பலர் பங்கேற்றனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மேலூர் பகுதியில் கருகும் பயிர்கள்... கலங்கும் விவசாயிகள்...

மேலூர், : மேலூரில் தண்ணீர் இன்றி கருகும் பயிர்களால் விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர். மேலூர் பகுதி பெரியாறு வைகை ஒரு போக பாசன பகுதியாகும். இப்பகுதியில் கள்ளந்திரி முதல் குறிச்சிபட்டி வரை 85 ஆயிரத்து 400 ஏக்கர் நிலம் உள்ளது. இதில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் விவசாயம் செய்யப்பட்டுள்ளது. பாசனத்திற்கு என அக்.25 தேதி தண்ணீர் திறக்கப்பட்டு நெல் நடவு செய்யப்பட்டது. நெற்பயிருக்கு இரண்டு முறை தண்ணீர் பாய்ச்சினால் போதும் என்ற நிலையில்  அணையில் தண்ணீர் நிறுத்தப்பட்டது. இதனால் விவசாயிகள் செய்வதறியாது திகைத்து வருகின்றனர். நெல் விளையாமல் போனால் இப்பகுதி மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு பெரும் நஷ்டம் ஏற்படும். மேலூர் பகுதியில் குவாரி மற்றும் தொழிற்சாலைகள் மூடிய நிலையில் விவசாயத்தை மட்டுமே இப்பகுதி மக்கள் நம்பி உள்ளனர். தற்போது தண்ணீர் திறக்காவிட்டால் விவசாயம் முற்றிலும் பாதிக்கப்படும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. இதுபற்றி பெரியாறு வைகை ஒரு போக பாசன பகுதி சங்க தலைவர் முருகன் கூறியதாவது: நாற்று நடவு செய்வது முதல் தற்போது வரை ஏக்கருக்கு ரூ.18 முதல் ரூ.20 ஆயிரம் வரை செலவு செய்துள்ளோம்.கடந்தஆண்டும் விவசாயம் பாதிக்கப்பட்டது. தற்போது கதிர் பிடித்து வருகிறது. இரண்டு முறை தண்ணீர் பாய்ச்சினால் நூற்றுக்கணக்காக ஏக்கர் பயிரை காப்பாற்ற முடியும். எனவே  தண்ணீர் திறக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். நாவினிப்பட்டி விவசாயி கூறுகையில், ஆயிரக்கணக்கான ரூபாய் கடன் வாங்கி விவசாயம் செய்துள்ள நிலையில் பயிர்கள் கருகி வருகின்றன. விவசாயிகளை நஷ்டத்தில் இருந்து காப்பாற்ற அரசு ஏற்கனவே அறிவித்தபடி ஏக்கருக்கு ரூ.12 ஆயிரத்து 944 நஷ்டஈடு கொடுக்க வேண்டும்

**மேட்டூர் அணை கால்வாயில் செத்து மிதக்கும் மீன்களால் நோய் பரவும் அபாயம்**

மேட்டூர், : மேட்டூர் அணையில் கிழக்கு மேற்கு பாசன கால்வாயில் ஆண்டுதோறும் ஆகஸ்ட் 1ம் தேதி முதல் டிசம்பர் 15ம் தேதி வரை பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படும். இதன் மூலம் சேலம், நாமக்கல், ஈரோடு மாவட்டங்களில் 45 ஆயிரம் ஏக்கர் பரப்பிலான நிலம் பாசன வசதி பெறுகிறது. விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, கடந்த ஆண்டு டிசம்பர் 31ம் தேதி வரை தண்ணீர் திறக்கப்பட்டது. தற்போது, தண்ணீர் திறப்பது நிறுத்தப்பட்டு உள்ளதால், பாசன கால்வாயில் ஆங்காங்கே குட்டை போல் தண்ணீர் தேங்கி நிற்கிறது. இதில் ஜிலேபி, அரஞ்சான், ஆரால் உள்ளிட்ட பல வகை மீன்கள் இருந்தன. பகலில் கொளுத்தும் வெயில் காரணமாக குட்டைபோல் தேங்கியுள்ள தண்ணீர் சூடாகி மீன்கள் செத்து மிதக்கின்றன. இதனால் கால்வாயின் இருபுறமும் உள்ள குடியிருப்பு பகுதிகளில் துர்நாற்றம் வீசுகிறது. இறந்த மீன்களை பொதுமக்கள் கூடைகளில் சேகரித்து, அவற்றை வெயிலில் காயவைத்து கருவாடாக்கி வியாபாரம் செய்து வருகின்றனர். இதனால் நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனிடையே, துர்நாற்றத்தை தடுக்க கால்வாயில் பொதுப்பணித்துறை அதிகாரிகள் தண்ணீரை திறந்து விட்டு, இறந்த மீன்களை அப்புறப்படுத்த வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**மாட்டுச் சந்தைகளை திறக்க விவசாயிகள் வேண்டுகோள்**

திருப்பூர், : தமிழ்நாடு விவசாயிகள் சங்க திருப்பூர் மாவட்டச் செயலாளர் மதுசூதனன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது: கோமாரி நோய் பரவுவதை தடுக்கவும், அந்நோயினால் மாடு பலியாவதைத் தடுக்கும் நோக்கிலும் இரு மாதங்களுக்கு முன் தமிழகத்தில் மாட்டுச் சந்தைகள் மூடப்பட்டன. தற்போது, நோய்த் தாக்குதல் கட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில், மாட்டுச்

சந்தைகள் செயல்பட இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை. சிறு, குறு விவசாயிகள் தங்கள் பொருளாதார அவசரத் தேவைகளுக்கு கால்நடைகளை விற்பது வழக்கம். ஆனால், மாட்டுச் சந்தைகள் இல்லாததால் மாடுகளை விற்க முடியாமல் விவசாயிகள் சிரமப்படுகின்றனர். எனவே, விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு மாட்டுச் சந்தைகளை உடனே திறக்க அரசு அனுமதி வழங்க வேண்டும்.

**மேட்டூர் அணை நீர்மட்டம் 63 அடியானது**



மேட்டூர்: காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாததால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைவாக உள்ளது. நேற்று முன்தினம் வினாடிக்கு 1037 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று காலை சற்று அதிகரித்து வினாடிக்கு 1049 கனஅடியாக இருந்தது. அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்காக வினாடிக்கு 9,000 கனஅடி வீதம் நீர் திறந்து விடப்பட்டிருந்தது. வரத்து குறைவாக இருப்பதாலும், தொடர்ந்து நீர் திறக்கப்படுவதாலும் நீர்மட்டம் நாள் ஒன்றுக்கு சுமார் ஒரு அடி வீதம் குறைந்து வருகிறது. நேற்று முன்தினம் 64.07 அடியாக இருந்த நீர்மட்டம் நேற்று காலை 63.18 அடியாக சரிந்தது.

**இன்றும் நாளையும் கனமழை பெய்யும்**




‘சென்னை: வங்கக் கடலில் நிலை கொண்டுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை தமிழகம் நோக்கி நகர்ந்து வந்துள்ளதை அடுத்து இன்றும் நாளையும் தமிழகம் புதுச்சேரியில் கனமழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வங்கக் கடலில் கடந்த வாரம் இலங்கைக்கு தென்கிழக்கு பகுதியில் ஒரு குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவானது. அது மேலும் வலுப்பெற்று வடமேற்கு திசையில் நகர்ந்தது. நேற்று முன்தினம் மாலை அந்த குறைந்த காற்றழுத்தம் இலங்கை அருகே மான்னர் வளைகுடா பகுதியில் நிலை கொண்டது. இதன் காரணமாக குளச்சல் பகுதியில் மழை பெய்தது.
இந்நிலையில் அந்த காற்றுழுத்த தாழ்வு நிலை தமிழகம் நோக்கி நகர்ந்து வந்துள்ளது. இதனால் தமிழக கடலோர பகுதியில் இன்று பெரும்பாலான இடங்களில் கனமழை பெய்யும் வாய்ப்புள்ளது. நாளை மிக கனமழை பெய்யும் வாய்ப்புள்ளது. மேலும் கடலில் காற்றின் வேகம் மணிக்கு 45 கிமீ முதல் 55 கிமீ வரை  இருக்கும். அதனால் மீனவர்கள் ஆழ்பகுதிக்கு செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கப் பட்டுள்ளனர். கடலூர், நாகப்பட்டினம் துறைமுகப் பகுதிகளில் 1ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

**விளைச்சல் அதிகரிப்பால் காலிபிளவர் கிலோ ரூ.10க்கு விற்பனை**



தர்மபுரி: கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர், ராயக்கோட்டை, சூளகிரி பகுதிகளில் இங்கிலீஸ் காய்கறிகளின் விளைச்சல் அதிகமாக உள்ளது. தற்போது காலி பிளவர் சீசன் என்பதால், ராயக்கோட்டை மற்றும் ஓசூர் மார்க்கெட்டுகளுக்கு அதிகளவில் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. இங்கிருந்து தர்மபுரி, சேலம், கரூர் உள்பட தென் மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. தர்மபுரி மாவட்டத்திற்கு தினமும் 5 லோடு காலி பிளவர் பூக்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. இவை தள்ளுவண்டிகளிலும், வேன்களிலும் குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது. தர்மபுரி நகரில் 2 கிலோ எடையுள்ள காலி பிளவர் பூ ஒன்று ரூ.20க்கு விற்பனை செய்யப்படுகிறது. விலை மலிவாக கிடைப்பதால் மக்கள் அதிகமாக வாங்கி செல்கின்றனர்.

**கொங்கணாபுரம் சந்தையில் தக்காளி, சின்ன வெங்காயம் வரத்து அதிகரிப்பால் விலை வீழ்ச்சி**



இடைப்பாடி: கொங்கணாபுரம் வாரச்சந்தையில் வரத்து அதிகரிப்பால் தக்காளி, வெங்காயம் விலை வீழ்ச்சியடைந்தது. சேலம் மாவட்டம் கொங்கணாபுரத்தில் வாரம் தோறும் சனிக்கிழமைகளில் சந்தை கூடுகிறது. இந்த சந்தைக்கு தர்மபுரி, ஓசூர், பெங்களூர், ராயக்கோட்டை, நாமக்கல் ஆகிய பகுதிகளிலிருந்து ஏராளமான வியாபாரிகள் வந்தனர். நேற்று வெளிமாநிலத்திலிருந்து அதிகளவில் பெரிய வெங்காயம் விற்பனைக்கு வந்தது. உள்ளூரிலிருந்தும் அதிகளவில் விற்பனைக்கு வந்ததால், விலை வீழ்ச்சியடைந்தது. இதனால், கிலோ ரூ.15 முதல் ரூ.20 வரை விற்கப்பட்டது. கடந்த வாரத்தை விட கிலோ ஒன்றுக்கு ரூ.5 முதல் ரூ.10 வரை விலை குறைந்தது. இதே போல், தக்காளி மேச்சேரி, தர்மபுரியிலிருந்து அதிகளவில் விற்பனைக்கு வந்துள்ளதால் கடந்த வாரம் ரூ.7 முதல் ரூ.9க்கு விற்ற தக்காளி தற்போது கிலோ ரூ.5 முதல் 6 வரை விற்கப்படுகிறது.

இதே போல, கத்தரிக்காய் ணீ10க்கும், முட்டைக்கோஸ் ரூ.10க்கும், பீர்க்கங்காய் ரூ.10க்கும், பீட்ரூட் ரூ.14க்கும், முள்ளங்கி ரூ.6க்கும், கேரட் ரூ.20முதல் 30 வரையிலும், தேங்காய் ரூ.6லிருந்து 20 வரைக்கும், இஞ்சி ரூ.50 முதல் ரூ.60 வரையிலும் விற்கப்படுகிறது. கரும்பு சிறியது ரூ.15முதல் 20 வரையிலும், பெரிய கரும்பு ஜோடி ரூ.40முதல் 50 வரையிலும் விற்கப்படுகிறது. இது தவிர 4ஆயிரம் ஆடுகளும், 3 ஆயிரம் கோழிகளும், சண்டைக்கோழிகளும் விற்பனைக்கு வந்தன. நேற்றைய சந்தையில் 67 டன் காய்கறிகள் ரூ.14 லட்சத்துக்கு விற்பனையானது.

**கொள்முதல் குறைப்பால் கறிக்கோழி விலை வீழ்ச்சி**



கோவை: சில்லரை விற்பனை விலையை உற்பத்தியாளர்கள் நிர்ணயிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து சில்லரை வியாபாரிகள் கறிக்கோழி கொள்முதலை குறைத்துள்ளனர். இதனால் கறிக்கோழி விலை கடந்த இரண்டு நாட்களாக சரிந்து வருகிறது. கோவை, திருப்பூர் மாவட்டத்தில் கறிக்கோழி உற்பத்தி செய்யப்படுகிறது. தினசரி மொத்த பண்ணை கொள்முதல் விலை மற்றும் சில்லரை விற்பனை விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. கடந்த 14ம் தேதி பண்ணை கொள்முதல் உயிருடன் கோழி கிலோ ஸி58 ஆக இருந்தது. இது பின்னர் படிப்படியாக உயர்ந்து 15 நாளில் கடந்த 30ம் தேதி ரூ.83ஐ அடைந்தது. சில்லரை விற்பனையில் தோல் நீக்கிய கறி ரூ.130லிருந்து ரூ.170 வரை உயர்ந்தது. இந்நிலையில், நேற்று முன்தினம் முதல் கறிக்கோழி விலை சரிய தொடங்கியது. கடந்த 3 நாளில் ஸி6 வரை குறைந்துள்ளது. நேற்றைய பண்ணை விலை கிலோ ரூ.77 ஆகவும், உயிருடன் கோழி கிலோ ரூ.99 ஆகவும், தோலுடன் கறி கிலோ ரூ.139 ஆகவும், தோல் நீக்கிய கறி கிலோ ரூ.149 ஆகவும் சரிந்தது.

**கடலை எண்ணெய், பாமாயில் விலை சரிவு**



விருதுநகர்: நிலக்கடலைப் பருப்பு விலை சரிவால் கடலை எண்ணெய் டின்னுக்கு ஸி30ம், பாமாயில் டின்னுக்கு ரூ.15ம் குறைந்துள்ளது. நிலக்கடலைப் பருப்பு (80 கிலோ) மூட்டை ரூ.3,900-லிருந்து ரூ.3,800 ஆக குறைந்துள்ளதால் கடலை எண்ணெய் (15 கிலோ) டின் ரூ.1,350-லிருந்து ரூ.1,320 ஆக சரிந்துள்ளது. டாலருக்கு நிகரான இந்திய ரூபாய் மதிப்பு உயர்வால் பாமாயில் (15 கிலோ) டின் ரூ.990-லிருந்து ரூ.975 என குறைந்துள்ளது. கடலை புண்ணாக்கு (100 கிலோ) மூட்டை ரூ.3,200-லிருந்து ரூ.3,100 ஆக குறைந்துள்ளது.

**பூ பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்**

வேப்பூர், : கடலூர் மாவட்டம் வேப்பூர், அடரி, சிறுபாக்கம், வடபாதி, ரெட்டாக்குறிச்சி உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் குறைவான நீர்பாசனம், குறைந்த உற்பத்தி செலவு, கூடுதல் வருவாய் ஆகியவற்றை கருத்தில் கொண்டு சாமந்தி, சம்பங்கி, மல்லிகை, வாடாமல்லி, சிந்தாமணி உள்ளிட்ட பூ பயிர்களை பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

பூ பயிரிடுவதால் கிருஷ்ணாபுரம் வனப்பகுதி யில் உள்ள வன விலங்குகள் பயிரை நாசம் செய்வதில்லை.

மேலும் பூக்களை சரியான அளவில் தினமும் அறுவடை செய்து ஆத்தூர், சேலம், விருத்தாசலம் பூ மார்க்கெட்களுக்கு அனுப்பி வைக்கின்றனர். இதனால் பூ விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கிறது. மேலும் தோட்டக்கலை துறை மூலம் பூ சாகுபடிக்கு மானியம் வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**எதிர்வரும் 2014–15 பருவத்திற்கு சணலுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை அதிகரிப்பு**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

மத்திய அரசு எதிர்வரும் 2014–15 பருவத்திற்கு (ஜுன் – ஜுலை) சணலின் குறைந்தபட்ச ஆதரவு விலையை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.100 உயர்த்தி ரூ.2,400–ஆக அதிகரித்துள்ளது. நடப்பு பருவத்தில் இது ரூ.2,300–ஆக உள்ளது.

அண்மையில் நடந்த பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவை குழு கூட்டத்தில் சணலுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை அதிகரிக்க அனுமதி அளிக்கப்பட்டது. இக்கூட்டம் முடிந்த பிறகு மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் டிடீ–5 ரக சணலுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை ரூ.100 உயர்த்தியுள்ளதாக தெரிவித்தார்.

குறைந்தபட்ச ஆதரவு விலையை அதிகரித்துள்ளதால் விவசாயிகள் சணல் சாகுபடியில் அதிக ஆர்வம் காட்டுவார்கள். இதனால் சணல் உற்பத்தி அதிகரிக்கும். மத்திய ஜவுளி அமைச்சகத்தின் சார்பாக இந்திய சணல் கழகம் கச்சா சணல்களை கொள்முதல் செய்கிறது. அசாம், பீகார், மேகாலயா, நாகலாந்து, ஒரிசா, மேற்கு வங்காளம் மற்றும் திரிபுரா ஆகிய மாநிலங்கள் சணல் சாகுபடியில் முன்னிலை வகிக்கின்றன.

மத்திய அமைச்சரவைக் குழு கூட்டத்தில் குறைந்தபட்ச ஆதரவு விலையில் கூடுதலாக உணவு தானியங்களை ஒதுக்கவும் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இயற்கை சீற்றங்கள், பண்டிகைகள் மற்றும் அவசர கால தேவைகளுக்காக உணவு தானியங்கள் கூடுதலாக ஒதுக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**தென்மாவட்டங்களில் அடுத்த 48 மணிநேரத்தில் கனமழை பெய்யும்: சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் ரமணன் தகவல்**




சென்னை காற்றழுத்த தாழ்வு மண்டலம், நாளை (திங்கட்கிழமை) அதிகாலை இலங்கையின் கிழக்கு கடற்கரை பகுதியில் கரையை கடக்கவிருப்பதால், தென்மாவட்டங்களில் அடுத்த 48 மணிநேரத்தில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் கூறினார்.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது:–

<u>இலங்கையில் கரையை கடக்கிறது</u>

தென் மேற்கு வங்கக்கடலில் நிலைக்கொண்டிருந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, வலு பெற்று காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறியுள்ளது. காற்றழுத்த தாழ்வு மண்டலம் நாகப்பட்டினம் மற்றும் இலங்கை திரிகோணமலையில் தென் கிழக்கில் 250 கி.மீ. தூரத்தில் மையம் கொண்டு இருந்தது. இது தற்போது வட மேற்கு நோக்கி நகர்ந்து, இலங்கையின் வடக்கு கடலோர பகுதியில் உள்ள யாழ்ப்பாணத்தின் கிழக்கே 210 கிலோ மீட்டரில் மையம் கொண்டுள்ளது.

இந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் நாளை (திங்கட்கிழமை) அதிகாலை இலங்கையின் கிழக்கு கடற்கரை பகுதியில் கரையை கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் அடுத்த 24 மணிநேரத்தில் தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. இதுதவிர பரவலாக தென்மாவட்டங்களில் அடுத்த 48 மணிநேரத்தில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது. கடந்த 24 மணிநேரத்தில் தமிழகத்தில் அதிகபட்சமாக குளச்சலில் ஒரு சென்டி மீட்டர் அளவு மழை பெய்துள்ளது.

<u>வறண்ட வானிலை</u>

இலங்கையில் காற்றழுத்த தாழ்வு மண்டலம் கரையை கடப்பதால், வங்க கடலில் ஆழ்கடல் பகுதியில் கடல் கொந்தளிப்பாக காணப்படும். வடக்கு, கிழக்கு திசையில் வடக்கில் இருந்து வலுவான கடல் காற்று வீசக்கூடும். ஆகவே மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்க செல்ல வேண்டாம். மீனவர்கள் மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும். தமிழகம் மற்றும் புதுச்சேரியில் கடலோர மாவட்டங்களில் ஒரு ஓரிரு இடங்களில் மழை பெய்யக்கூடும். சென்னையை பொறுத்தவரையில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். லேசான மழை ஒரு சில இடங்களில் பெய்யக்கூடும். இதுதவிர தமிழகத்தின் உள்மாவட்டங்கள், கேரளா, லட்சத்தீவு, கர்நாடகா, ஆந்திரா ஆகிய பகுதிகளில் வறண்ட வானிலை காணப்படும்.

**தர்மபுரி மாவட்டத்தில், 3 இடங்களில் வறட்சி காலத்தில் தீவன பற்றாக்குறை**

தர்மபுரி மாவட்டத்தில் வறட்சி காலத்தில் தீவன பற்றாக்குறையை சமாளிக்க 3 இடங்களில் வைக்கோல் சேமிப்பு கிடங்கு அமைக்க அரசு உத்தரவிட்டுள்ளது. இதனால் சேமிப்பு கிடங்கு தொடர்பான விலைப்பட்டியலை வருகிற 20-ந்தேதிக்குள் அனுப்பலாம் என்று கலெக்டர் விவேகானந்தன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது:-

வைக்கோல் சேமிப்பு கிடங்கு

தர்மபுரி மாவட்டத்தில் வறட்சி காலத்தில் தீவன பற்றாக்குறையை சமாளிக்க செட்டிக்கரை, பென்னாகரம், மொரப்பூர் ஆகிய 3 கால்நடை மருந்தகங்களில் வைக்கோல் சேமிப்பு கிடங்கு வைத்து விற்பனை செய்ய அரசு உத்தரவிட்டுள்ளது. இந்த இடங்களில் கால்நடை வளர்ப்போர்களுக்கு வைக்கோல் மானிய விலையில் விற்பனை செய்ய வேண்டி உள்ளதால் அந்தந்த மருந்து கிடங்கிற்கு தேவையான வைக்கோல் உள்ளூர் கிடங்கிற்கும் தனித்தனியாக போட்டி விலைப்பட்டியல் வரவேற்கப்படுகிறது.

போட்டி விலைப்பட்டியலில் 1 டன் வைக்கோல் (உலர்ந்த நிலையில்) கிடங்கு அமைக்கப்பட்டுள்ள இடங்களில் கொண்டு வந்து சேர்க்க ( வைக்கோல், வண்டி வாடகை, ஏற்றுக்கூலி, இறக்குக் கூலி எடை மேடையில் எடை போட்ட அத்தாட்சியுடன்) விலையை குறிப்பிட்டு வருகிற 20-ந்தேதிக்குள் மண்டல இணை இயக்குனர் தர்மபுரி என்ற முகவரிக்கு விண்ணப்பத்தை அனுப்பி வைக்க வேண்டும். மேலும் குறிப்பிட்ட தேதிக்குப்பின் பெறப்படும் போட்டி விலைப்பட்டியல்கள் ஏற்று கொள்ள முடியாது.

ரத்து செய்ய அதிகாரம்

உள்ளூர் கொள்முதல் தொடர்பாக மேலும் விவரங்கள் அறிய வேலை நாட்களில் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை தர்மபுரி கால்நடை பராமரிப்புத்துறை

மண்டல இணை இயக்குனர் அலுவலகத்தில் பெறலாம். ஒன்றுக்கு மேற்பட்ட போட்டியாளர்கள் ஒரே தொகை குறிப்பிட்டு இருந்தால் இதில் மாவட்ட நிர்வாக குழுவின் முடிவே இறுதியானது. அதன்மீது எந்த ஒரு அலுவலகத்திலும், எந்தவிதமான முறையீடும் ஏற்றுக்கொள்ள முடியாது. உள்ளூர் கொள்முதல் தொடர்பான விவசாயிகள், வியாபாரிகள் ஒப்பந்த காலத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொகையை எக்காரணம் கொண்டும் உயர்த்தி கோர அனுமதி இல்லை. உள்ளூர் கொள்முதல் தொடர்பான எந்த ஒரு போட்டி விலைப்பட்டியலையும் ஒப்பந்த காலத்தில் எக்காரணத்தையும் குறிப்படாமல் ஒப்பந்தத்தை ரத்து செய்ய மாவட்ட நிர்வாக குழுவுக்கு முழு அதிகாரம் உண்டு. எனவே தர்மபுரி மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள், வியாபாரிகள் உரிய விலைப்பட்டியலை அனுப்பி பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கலெக்டர் தெரிவித்துள்ளார்.

**கால்நடை சந்தைகள் மீண்டும் திறக்கப்பட்டன ஆடு-மாடுகள் விற்பனை**



தடை நீக்கம் செய்யப்பட்ட பின், ஊத்தங்கரை கால்நடை சந்தை மீண்டும் கூடியதை படத்தில் காணலாம்.

கிருஷ்ணகிரி,

கோமாரி நோயை கட்டுப் படுத்த விதிக்கப் பட்டிருந்த தடை நீக்கப் பட்டதை அடுத்து கிருஷ்ணகிரி மாவட்டத் தில் உள்ள கால்நடை சந்தைகள் மீண்டும் திறக்கப்பட்டன. 2 மாதங் களுக்கு பிறகு சந்தை கூடியதால் ஆடு-மாடு களின் விற்பனை விறு விறுப்பாக நடந்தது.

தடை நீக்கம்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கோமாரி நோயால் கால்நடை கள் பாதிக்கப்பட்டது. குறிப் பாக போச்சம்பள்ளி, மத்தூர், ஊத்தங்கரை உள்ளிட்ட இடங்களில் 100-க்கும் மேற் பட்ட மாடுகள் கோமாரி நோய் தாக்கி இறந்தன இதை யடுத்து கோமாரி நோயை கட்டுப்படுத்த மாவட்ட நிர் வாகம் தீவிர நடவடிக்கை எடுத்தது. மாவட்டம் முழு வதும் கால்நடை சிறப்பு மருத்துவ முகாம்கள் அமைக் கப்பட்டு கால்நடைகளுக்கு மருத்துவ பரிசோதனை மற்றம் சிகிச்சையளிக்கப்பட்டது. கேமாரி நோய் ஒரு மாட்டில் இருந்து மற்ற மாடுகளுக்கு பரவும் தன்மை கொண்டதால், கால்நடை சந்தைகள் நடத்த தடை விதிக்கப்பட்டது. இத னால் மாவட்டத்தில் உள்ள அனைத்து கால்நடை சந்தை களும் அடைக்கப்பட்டன.

இந்தநிலையில் கோமாரி நோய் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டதை அடுத்து கால் நடை சந்தைகளுக்கான தடை சமீபத்தில் நீக்கப்பட்டது.

விற்பனை விறுவிறுப்பு

இதையடுத்து போச்சம் பள்ளி வாரச்சந்தை கடந்த ஞாயிற்றுக்கிழமை கூடியது. இந்தநிலையில் வாரந்தோறும் வெள்ளிக்கிழமை கூடும் வாரச் சந்தைகளான ஊத்தங்கரை கால்நடை சந்தை மற்றும் கிருஷ்ணகிரி அருகே உள்ள குந்தாரப்பள்ளி வாரச்சந்தை நேற்று சுமார் 2 மாதங்களுக்கு பிறகு மீண்டும் கூடியது.

ஊத் தங்கரை சந்தைக்கு விற்பனைக் காக ஏராளமான மாடுகளும் கோழிகளும் கொண்டுவரப் பட்டன. குந்தாரப்பள்ளி சந்தையில் ஆடு-மாடுகளின் விற்பனை விறுவிறுப்பாக நடைபெற் றது.

பொங்கல் பண்டிகை செலவுக்காக, கால்நடை வளர்ப்பவர்கள் தங்கள் ஆடு, மாடுகளை விற்பனை செய் வதற்காக சந்தைக்கு கொண்டு வந்திருந்தனர். இவற்றை வாங்குவதற்காக பல்வேறு பகுதிகளில் இருந்து வியாபாரி களும் அதிக அளவில் வந்திருந்தனர்.

**பால் கொள்முதல் விலை உயர்வு முதல்-அமைச்சருக்கு தமிழ் தேசியக்கட்சி**

சோமனூர், -

தமிழ் தேசியக்கட்சியின் கோவை வடக்கு மாவட்ட தலைவர்கே.சண்முகம் ஒரு அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

தமிழ்நாட்டில் வறட்சியிலும் பல்வேறு இன்னல்களிலும் சிக்கி கடினமான சூழ்நிலையில் விவசாயிகள் கால்நடைகளை வளர்த்து வருகின்றனர். இந்நிலையில் தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதா பால் விலையை லிட்டர் ஒன்றுக்கு 3 ரூபாய் உயர்த்தி இருப்பது விவசாயிகளின் மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தமிழக முதல்-அமைச்சரின் இந்த அறிவிப்பை தமிழ் தேசியக் கட்சி முழுமனதோடு வரவேற்கிறது.

இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

**குன்னூர் ஏல மையத்தில் தேயிலை தூள் விலை உயர்வு**



குன்னூர் ஏல மையத்தில் தேயிலைதூள்விலை உயர்ந்தது.

2 ரூபாய் விலை உயர்வு

குன்னூர் ஏல மையத்தில் இந்த ஆண்டின் முதல் ஏலம் கடந்த 2, 3 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. இந்த ஏலத்திற்கு மொத்தம் 14 லட்சத்து 86 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில் 10 லட்சத்து 9 ஆயிரம் கிலோ இலை ரகமாக வும், 4 லட்சத்து 77 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது.

இந்த ஏலத்தில் 86 சதவீத தேயிலை தூள் விற்பனை ஆனது. தேயிலை தூளுக்கு தேவை அதிகரித்து இருந்ததால் அனைத்து தேயிலை தூள் ரகங்களுக்கும் 2 ரூபாய் விலை உயர்வு ஏற்பட்டது.சி.டி.சி. தேயிலை தூளின் உயர்ந்த பட்ச விலையாக 200 ரூபாயும், ஆர்தோடக்ஸ் தேயிலை தூள் 300 ரூபாய் என்று உயர்ந்த பட்ச விலையாக ஏலம் சென் றது.

இலை ரக தேயிலை தூள்

சராசரி விலையாக இலை ரக தேயிலை தூளின் சாதாரண வகை 55 ரூபாயில் இருந்து 60 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 100 ரூபாயில் இருந்து 160 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.டஸ்ட் ரக தேயிலை தூளின் சாதாரண வகை 65 ரூபாயில் இருந்து 67 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 120 ரூபாயில் இருந்து 180 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.விற்பனை எண் 2-க்கான ஏலம் வருகிற 9, 10 ஆகிய தேதிகளில் நடக்கி றது. இந்த ஏலத்திற்கு மொத்தம் 18 லட்சத்து 42 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.

**மலர் கண்காட்சியை முன்னிட்டு அரசு தாவரவியல் பூங்காவை அழகு படுத்தும் பணி மும்முரம்**



ஊட்டி,

மலர் கண்காட்சியை முன்னிட்டு அரசு தாவரவியல் பூங்காவை அழகு படுத்தும் பணியில் பூங்கா ஊழியர்கள் ஈடுபட்டு வருகிறார்கள்.

## அரசு தாவரவியல் பூங்கா

ஊட்டி அரசு தாவரவியல் பூங்கா சுமார் 55 ஏக்கர் பரப்பளவு கொண்டது. சுமார் 150 ஆண்டு கள் பாரம்பரியம் கொண்ட இந்த பூங்காவை இங்கிலாந்தை சேர்ந்த மெக்ஐவர் என்கிற ஆங்கிலேயர் உருவாக்கினார்.

போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு இல்லாத அந்த காலத்தில் ஐரோப்பா, ஆஸ்தி ரேலியா, நியூசிலாந்து உள்ளிட்ட நாடுகளில் இருந்து செடிகள் வரவழைக்கப்பட்டு இங்கு நடவு செய்யப்பட்டன.

## கண்ணாடி மாளிகை

தற்போது இங்கு 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தாவர இனங்கள் உள்ளன. இதில் பெரும்பாலான தாவரங்கள் 100– ஆண்டுகளுக்கும் பழமையான தாக உள்ளன. இது தவிர 80 வகையான பெரணி செடிகள் இங்கு உள்ள கண்ணாடி மாளிகையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் பல்வேறு வகையான கள்ளி செடிகள், போன்சாய் மரங் களும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

தாவரவியல் ஆராய்ச்சியாளர்களுக்கும், மாணவர்களுக்கும் பொக்கிஷமாய் விளங்கும் ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவை ஆண்டு தோறும் உள்நாடு மற்றும் வெளி நாடுகளை சேர்ந்த சுமார் 23 லட்சம் சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்து செல்கின்றனர்.

## 3 லட்சம் மலர் செடிகள்

இந்த நிலையில், கோடை சீசனை முன்னிட்டு ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் சுமார் 15 ஆயிரம் பூந்தொட்டிக ளில் மலர் செடிகள் நடவு செய்யப்படுகின்றன. இந்த சீசனிற்காக ஆப்ரிகன் மேரி கோல்டு, பிரென்ஞ் மேரி கோல்டு, கேலண்டூலா, அன்டி ரைனம், பெட்டூனியா, பேன்சி ஆஸ்டர், கார்னேசன், கலி போர்னியா பாப்பி, ஸ்வீட் லில்லியம், டையான்தஸ், கோச்சியா, சன் பிளவர், டாலியா, லேடிஸ் லேஸ், சப் னேரியா, கோடி ஷியா, அஜிரேட்டம், ஹெலி ஹீரை சம்,

ஜீனியா சிலோசியா, அமா ரன்தஸ், கஷேனியா, லூபின், நெமிஷியா, ஸ்டாக்ஸ் உள் ளிட்ட ரகங்களை சேர்ந்த சுமார் 2½ லட்சம் முதல் 3 லட்சம் வரை மலர் செடிகள் நடவு செய்யப் படுகிறது.

இந்த பூந்தொட்டிகளில் மலர்கள் மலர்ந்ததும் பூங்காவில் உள்ள மலர் மாடத்தில் அடுக்கி வைக்கப்படும்.

<u>அழகுபடுத்தும் பணி தீவிரம்</u>

நீலகிரி மாவட்டத்தில் கடந்த 2 மாதங்களாக கடுங் குளிர் நிலவி வருகிறது. இதன் காரணமாக தேயிலை தோட்டங்கள், மலைக்காய்கறிகள் பனியால் கருகி வருகின்றன. இதையடுத்து, ஊட்டி தாவர வியல் பூங்கா, ரோஜா பூங்கா, மரவியல் பூங்கா உள்பட பூங்காக்களில் உள்ள மலர் செடிகளை பாதுகாக்க பூங்கா ஊழியர்கள் அலங்கார செடிகள் மீது காட்டுச்செடிகளை போட்டு, பனியில் இருந்து செடிகளை பாதுகாத்து வருகிறார்கள்.

இதேபோல் கோடை சீசனை முன்னிட்டு முன் னிட்டு ஊட்டி அரசு தாவர வியல் பூங்காவில் தற்போது மலர்செடி கள் நடவு செய்யும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். மேலும், மலர் கண்காட்சியை முன்னிட்டு அரசு தாவரவியல் பூங்காவை அழகுபடுத்தும் பணியில் பூங்கா ஊழியர்கள் ஈடுபட்டு வருகிறார்கள்.

<u>அல்லி தாமரைகள் அகற்றம்</u>

இந்த நிலையில், நேற்று காலை ஊட்டி அரசு பூங்கா வில் உள்ள குளங்களில் வளர்ந்து உள்ள அல்லி தாமரைகளை அகற்றும் பணியில் பூங்கா ஊழியர்கள் ஈடுபட்டனர். பூங்கா ஊழியர்கள் கடுங் குளிரையும் பொருட் படுத்தா மல் குளத்தில் இறங்கி அல்லி தாமரைகளை அப்புறப்படுத்தி னார்கள்.

**தேயிலை தூள் உற்பத்தி செய்ய தென்னிந்தியாவில் 40 சிறு தேயிலை தொழிற்சாலைகள் தேவை ஆலோசனை குழு உறுப்பினர் தகவல்**

குன்னூர்,–

தென்னிந்தியாவில் தேயிலை தூள் உற்பத்தி செய்ய புதிதாக 400 சிறு தேயிலை தொழிற் சாலைகள் தேவைப் படுவதாக இந்திய சிறு தேயிலை துறை ஆலோசனை குழு உறுப்பினர் டாக்டர் ராமு தெரிவித்து உள்ளார்.

<u>ஆலோசனை குழு</u>

இந்திய அளவில் சிறு தேயிலை துறையின் முழுமையான வளர்ச்சியை உறுதிப் படுத்த தேயிலை வாரியம் இந்திய அளவில் ஆலோசனை குழுவை அமைத்து உள்ளது. இந்த ஆலோசனை குழுவிற்கு கோஷிபேபி தலைவராக நிய மனம் செய்யப்பட்டு உள்ளார்.

தேயிலை வாரிய உறுப்பினர் டாக்டர் ராமு இந்த ஆலோ சனை குழுவின் தென் மாநில பிரதிநிதியாக தேர்வு செய்யப் பட்டு உள்ளார்.

இந்த ஆலோசனை குழுவின் செயல்பாடு குறித்து உறுப்பினர் டாக்டர் ராமு கூறியதாவது:–

இந்த ஆலோசனை குழு வின் மூலம் சுய உதவி குழுக் களுக்கு மானியம் வழங்குவது, முதிர்ச்சியடைந்த தோட்டங் களில் மறுநடவு செய்வது, இளைய தலை முறை விவசாயி களுக்கு அவரவர் கிராமத்தில் பயிற்சி மற்றும் செயல் முறை விளக்கம் அளிப்பது, ஆண்டு தோறும் அதிகளவில் தேயிலை கவாத்து செய்ய முயற்சி மேற் கொள்வது போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கும்.

<u>40 சதவீதம் மானியம்</u>

தேயிலை வாரியம் தற்போது அறிமுகப்படுத்தி உள்ள திட் டத்தின் மூலம் 25 ஏக்கருக்கும் குறைவாக உள்ள விவசாயி கள்,சுய உதவிக்குழுக்கள் சிறு தேயிலை

தொழிற் சாலைகள் தொடங்க 40 சதவீதம் மானி யம் பெறலாம். தென்னிந்திய அளவில் தேயிலை தூள் உற்பத்தி செய்ய இன்னும் 300–ல் இருந்து 400 சிறு, குறு தேயிலை தொழிற் சாலைகள் தேவைப்படுகிறது. எனவே புதிதாக 2 ஆயிரம் குழுக்கள் அமைப்பதிலும், புதிய தொழிற் சாலைகள் தொடங்குவதிலும் இந்த குழு சிறு தேயிலை துறைக்கு உதவிகளை செய்யும்.

சிறு தேயிலை துறைக்கு ஒதுக் கப்பட்டு உள்ள வளர்ச்சி தொகையினை முழுமையாக சிறு விவசாயிகள் மற்றும் தொழிற்சாலைகள் மேம்பாட் டிற்காக பயன்படுத்துவதிலும் இந்த ஆலோசனை குழு கவ னம் செலுத்தும். இவ்வாறு அவர் கூறினார்.

**காய்கறிகள் வரத்து அதிகரிப்பால் தஞ்சை காமராஜ் மார்க்கெட்டில் தக்காளி, வெங்காயம், கேரட் விலை சரிவு பூக்களின் விலையும் குறைந்துள்ளது**



தஞ்சாவூர், தஞ்சையில் உள்ள காமராஜ் காய்கறி மார்க்கெட்டிற்கு காய்கறிகள் வரத்து அதிகரிப்பால் தக்காளி, வெங்காயம், கேரட் உள்பட காய்கறி விலைகள் அதிரடியாக சரிந்துள்ளது. பூக்களின் விலையும் பாதிக்கு பாதியாக குறைந்துள்ளது.

<u>தஞ்சை காமராஜ் மார்க்கெட்</u>

தமிழகத்தில் உள்ள பல்வேறு மாவட்டங்களில் இருந்து மட்டுமல்லாது ஆந்திரா, கர்நாடகா, கேரளா உள்பட பல்வேறு மாநிலங்களில் இருந்தும் தஞ்சையில் உள்ள மொத்த காய்கறி மார்க்கெட்டான காமராஜ் மார்க்கெட்டிற்கு தினமும் காய்கறிகள் வருகிறது.

வடகிழக்கு பருவமழை போதிய அளவு பெய்ததால் மேற்கூறிய மாநிலங்களில் காய்கறிகள் விளைச்சல் அதிகமாக உள்ளது. இதனால் காமராஜ் மார்க்கெட்டிற்கு அனைத்து காய்கறிகளின் வரத்து அதிகமாக உள்ளன. வரத்து அதிகரிப்பால் காய்கறிகளின் விலை சரிய தொடங்கி உள்ளது.

விலை சரிவு

தஞ்சை காமராஜ் மொத்த மார்க்கெட்டில் கடந்த 2 வாரங்களுக்கு முன்பு ரூ.20 முதல் ரூ.30 வரை விற்பனையான ஒரு கிலோ கத்திரிக்காய் விலை குறைந்து நேற்று ரூ. 6 முதல் ரூ.14 வரை விற்பனையானது. இதேபோல் ரூ.60–க்கு விற்பனையான பல்லாரி வெங்காயம் ரூ.12 முதல் ரூ.24 வரைக்கும், ரூ.76–க்கு விற்பனையான சின்ன வெங்காயம் ரூ.16 முதல் ரூ.32 வரைக்கும், ரூ.22–க்கு விற்பனையான பச்சமிளகாய் ரூ.16 முதல் ரூ.20 வரைக்கும், ரூ.90–க்கு விற்பனையான இஞ்சி ரூ.65 முதல் ரூ.80 வரைக்கும், ரூ.24 முதல் ரூ.32 வரையில் விற்கப்பட்ட தக்காளி ரூ.6 முதல் ரூ.8 வரைக்கும், ரூ.18 முதல் ரூ.30 வரை விற்கப்பட்ட கேரட் ரூ.12 முதல் ரூ.20 வரைக்கும், ரூ.16 முதல் ரூ.20 வரை விற்கப்பட்ட முள்ளங்கி ரூ.7 முதல் ரூ.10 வரைக்கும் விற்பனை செய்யப்பட்டது.

இதேபோல், ரூ.16 முதல் ரூ.20 வரை விற்பனையான பீட்ரூட் ரூ.10 முதல் ரூ.12 வரைக்கும், ரூ.16 முதல் ரூ.20 வரை விற்கப்பட்ட சவ்சவ் ரூ.8 முதல் ரூ.12 வரைக்கும், ரூ.20 முதல் ரூ.22 வரை விற்பனையான அவரைக்காய் ரூ.12 முதல் ரூ.20 வரைக்கும் விற்பனை செய்யப்பட்டது. இதில் ரூ.7 முதல் ரூ.8 வரை விற்பனை செய்யப்பட்ட வெண்டைக்காய் விலை உயர்ந்து ரூ.16 முதல் ரூ.20 வரை விற்பனை செய்யப்படுகிறது. ரூ.50 முதல் ரூ.60 வரை விற்கப்பட்ட பச்சைப்பட்டாணி ரூ.30 முதல் ரூ.40 வரைக்கும், பாகற்காய் ரூ.14 முதல் ரூ.30 வரைக்கும் விற்பனை செய்யப்பட்டது.

<u>முருங்கைக்காய், தேங்காய் வரத்து குறைவு</u>

பனிப்பொழிவால் முருங்கைக்காய், தேங்காய் விளைச்சல் மிகவும் குறைந்துள்ளது. இதனால் தஞ்சை காமராஜ் மார்க்கெட்டிற்கு தேங்காய் மற்றும் முருங்கைக்காய் வரத்து மிகவும் குறைந்துள்ளது. இதனால் முருங்கைக்காய்க்கும், தேங்காய்க்கும் தட்டுப்பாடு அதிகரித்துள்ளது.

அதன் விலையும் உயர்ந்து வருகிறது. நேற்று ஒரு தேங்காய்(அளவுக்கு ஏற்றார்போல) ரூ.6 முதல் ரூ.20 வரைக்கும் விற்பனை செய்யப்பட்டது. முருங்கைக்காய் மற்றும் தேங்காய் வரத்து மிகவும் குறைவாக உள்ளதாகவும், இதனால் அதன் விலை கடுமையாக உயர்ந்துள்ளது என்றும் தஞ்சை காமராஜ் காய்கறி வர்த்தக சங்க நிர்வாகி மல்ராஜ் கூறினார்.

<u>பூக்கள் விலை சரிவு</u>

பனிப்பொழிவால் பூக்களின் விலையும் கடுமையாக வீழ்ச்சி அடைந்துள்ளன. இந்த 2 மாதங்களில் சுப முகூர்த்த நாட்கள் இல்லாததாலும், சபரி மலை சீசன் முடிவடையும் தருவாயில் இருப்பதாலும் பூக்களின் விலை குறைந்து வருகிறது. கடந்த வாரம் ரூ.1000 முதல் ரூ.1200 வரை விற்கப்பட்ட ஒரு கிலோ மல்லிகைப்பூ நேற்று ரூ.400–க்கு விற்பனை செய்யப்பட்டது.

இதேபோல் ரூ.50 முதல் ரூ.60 வரை விற்பனை செய்யப்பட்ட செவ்வந்தி ரூ.30 முதல் ரூ.35 வரைக்கும், ரூ.500 முதல் ரூ.600 வரை விற்பனை செய்யப்பட்ட ஜாதி மல்லி ரூ.300 முதல் ரூ.350 வரைக்கும், ரூ.150–க்கு விற்கப்பட்ட அரலிப்பூ ரூ.80–க்கும், ரூ.50 முதல் ரூ.60 வரை விற்பனை செய்யப்பட்ட கோழிக்கொண்டை பூ ரூ.40–க்கும், ரூ.40–க்கு விற்கப்பட்ட ரோஜாப்பூ ரூ.30–க்கும், ரூ.25–க்கு விற்கப்பட்ட செண்டிப்பூ ரூ.20–க்கும், ரூ.40 முதல் ரூ.50 வரை விற்பனை செய்யப்பட்ட மரிக்கொழுந்து(ஒரு கட்டு) ரூ.30–க்கும் விற்பனை செய்யப்பட்டது.

இதில் ரூ.300–க்கு விற்பனையான முல்லைப்பூ மட்டும் வரத்து குறைவால் விலை உயர்ந்து ரூ.400–க்கு விற்பனை செய்யப்பட்டது என்று தஞ்சை பூச்சந்தை செயலாளர் கந்தசாமி கூறினார். மேலும் அவர் பொங்கல் பண்டிகை வருவதால் பூக்கள் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது என்றும் தெரிவித்தார்.

<u>கரும்பு ஒரு கட்டு ரூ.250</u>

தஞ்சையில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கரும்பு வரத்து அதிகரித்துள்ளது. ஆங்காங்கே சாலையோர திடீர் கடைகள் அமைக்கப்பட்டு கரும்பு விற்பனை சூடுபிடித்துள்ளது. தஞ்சையில் நேற்று கரும்பு ஒரு கட்டு ரூ.250–க்கு விற்பனை செய்யப்பட்டது. பொங்கல் பண்டிகை நெருங்கி வருவதால் கரும்பு விலை மேலும் அதிகரிக்கும் என்று விற்பனையாளர் தெரிவித்தார்.

**நாகையில் கடல் சீற்றம்; மீனவர்கள் மீன்பிடிக்க செல்லவில்லை**



நாகையில் ராட்சத அலைகளுடன் கடல் சீற்றத்துடன் காணப்பட்ட போது எடுத்த படம்.



கடல் சீற்றம் காரணமாக மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்லாததால் நம்பியார் நகர் பகுதியில் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பைபர் படகுகளை படத்தில் காணலாம்.

நாகையில் கடல் சீற்றம் ஏற்பட்டுள்ளதால் மீனவர்கள் மீன்பிடிக்க செல்லவில்லை.

கடல் சீற்றம் தமிழகத்தில் அக்டோபர் மாதம் முதல் டிசம்பர் மாத இறுதி வரை வடகிழக்கு பருவமழைக் காலம் ஆகும். இந்த காலத்தில் விவசாயிகள் குறுவை, சம்பா, தாளடி உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்வது வழக்கம்.

இந்த ஆண்டு கடந்த அக்டோபர் மாதம் வடகிழக்கு பருவமழை காலம் தொடங்கியது. ஆனால் இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை போதிய அளவு பெய்யாததால், நெல் சாகுபடி செய்த விவசாயிகளும், பொது மக்களும் பெரிதும் கவலை அடைந்துள்ளனர். இந்தநிலையில் வடகிழக்கு பருவமழையை நம்பி நெல் சாகுபடி செய்த விவசாயிகள் போதிய அளவு மழை பெய்யாததால் பயிர்கள் காயும் நிலையில் உள்ளன. இந்த நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு மேடி புயல் உருவானது. ஆனால் இந்த புயல் காரணமாக தமிழகத்தில் பெரிய அளவில் மழை இல்லை. இதனால் விவசாயிகளுக்கு பெரும் ஏமாற்றமே மிஞ்சியது.

காற்றழுத்த தாழ்வு மண்டலம் தற்போது வங்க கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி வலுவடைந்து காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறி உள்ளது. இந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் வங்க கடலில் திரிகோண மலையில் இருந்து கிழக்கே 240 கிலோ மீட்டர் தொலைவிலும், நாகையில் இருந்து வடமேற்கு திசையில் இலங்கை நோக்கி நகர்ந்து செல்கிறது. இதனால் நாகை துறைமுகத்தில் 1-ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டு 2-வது நாளாக நேற்றும் நீடித்தது.

மீன்பிடிக்க செல்லவில்லை: நாகையில் நேற்று வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. கடற்பகுதியில் அவ்வப்போது ராட்சத அலைகள் எழும்பி கடல் சீற்றத்துடன் காணப்பட்டது. இதனால் நாகை பகுதி மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டது. எனவே நாகை பகுதியில் உள்ள சுமார் 500-க்கும் மேற்பட்ட மீன்பிடி பைபர் படகுகள் கடலுக்கு மீன்பிடிக்க செல்லவில்லை. இதனால் மீனவர்களின் படகுகள் கடற்கரையில் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. தொடர் வேலை நிறுத்தத்துக்கு பின் நாகை மீனவர்கள் கடந்த சில நாட்களுக்கு முன் மீன்பிடிக்க சென்றனர். தற்போது கடல் சீற்றம் அதிகரித்துள்ளதால் நாகை மீனவர்கள் மீன்பிடிக்க செல்லாமல் உள்ளனர்.

வேதாரண்யம்:வேதாரண்யம் தாலுகாவை சேர்ந்த கோடியக்கரை, ஆர்க்காட்டுத்துறை, புஷ்பவனம், வெள்ளப்பள்ளம், வானவன்மகாதேவி ஆகிய

மீனவ கிராமத்தில் உள்ள சுமார் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்லவில்லை. கடல் சீற்றம் காரணமாக மீனவர்கள் தங்கள் பைபர் படகுகளை பாதுகாப்பாக கடற்கரையில் நிறுத்தி வைத்துள்ளனர். மேலும் வேதாரண்யம் பகுதியில் லேசான காற்றுடன் கூடிய சாரல் மழை பெய்தது .

**நன்னிலத்தில் சம்பா நெல் அறுவடை பணி தீவிரம்**




நன்னிலம் அருகே திருமீயச்சூர் கிராமத்தில் சம்பா நெல் அறுவடை பணிகள் எந்திரம் மூலமாக நடைபெறுவதை படத்தில் காணலாம்.

நன்னிலம் வட்டார பகுதிகளில் சம்பா நெல் அறுவடை பணிகள் தீவி ரம் அடைந்துள்ளன.

சம்பா சாகுபடி

திருவாரூர் மாவட்டத்தில் சம்பா நெல் சாகுபடி 1 லட்சத்து 28 ஆயிரத்து 412 எக்டேர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டது. இதில் 70 ஆயிரத்து 264 எக்டேர் பரப்பில் நேரடி நெல் விதைப்பு முறையில் சாகுபடி நடை பெற்றது. 58 ஆயிரத்து 148 எக்டேர் பரப்பில் நடவு முறை யில் சாகுபடி நடைபெற்றது. பயிர்கள் தற்போது அறுவடை பருவத்தை எட்டியுள்ளன. இதையடுத்து மாவட்டத்தில் அறுவடை பணிகளில் விவ சாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

அறுவடை பணிகள்: திருவாரூரை அடுத்துள்ள நன்னிலம் மற்றும் அதன் சுற்று வட்டார கிராமங்களில் தற் போது அறுவடை பணிகள் தீவிரம் அடைந்துள்ளன. அறு வடை பணிக்கு ஆட்கள் பற் றாக்குறை இருப்பதால், எந்திர முறையில்

சாகுபடி பணி நடைபெறுவதாக விவசாயிகள் கூறுகின்றனர். அறுவடை பணிகள் குறித்து நன்னிலம் வட்டார விவ சாயிகள் நிருபர்களிடம் கூறிய தாவது:-

எந்திரங்கள் மூலமாக... நன்னிலம் வட்டாரத்தில் 14 ஆயிரம் எக்டேருக்கும் அதிக மான பரப்பில் சம்பா, தாளடி பயிர்கள் சாகுபடி செய்யப்பட் டன. கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் பயிர் விடும் பணிகள் தொடங்கின. தற்போது சம்பா பயிர்கள் அறுவடை பணி நடைபெற்று வருகிறது. நன்னி லம் பகுதியில் அறுவடை பணிகள் தீவிரம் அடைந்து ள்ளது. திருமீயச்சூர், பேரளம், நன்னிலம், மாப்பிள்ளைக் குப்பம் போன்ற பகுதிகளில் அறுவடை பணிகள் மும்முர மாக நடைபெறுகிறது. அறு வடை பணிகளுக்கு தேவை யான ஆள் பற்றாக்குறை இருப் பதால் எந்திரங்கள் மூலமாக பணிகள் முழு வீச்சில் நடை பெறுகின்றன.

**சம்பா சாகுபடி அறுவடை தொடங்கியது நெல்லுக்கு உரிய விலை கிடைக்காததால் விவசாயிகள் கவலை**



காட்டுமன்னார்கோவில் பகுதியில் சம்பா சாகுபடி அறுவடை தொடங்கப்பட்டுள்ளது. நெல்லுக்கு உரிய விலை கிடைக்காததால் விவசாயிகள் பெரும் கவலையடைந்துள்ளனர்.

## சம்பா சாகுபடி அறுவடை பணி

காட்டுமன்னார்கோவில் டெல்டா பகுதியில் கடந்த ஆண்டு பருவமழை மற்றும் வீராணம் ஏரி தண்ணீரை நம்பி கடந்த ஜூலை மாதம் சுமார் 50 ஆயிரம் ஏக்கருக்கு மேல் விவசாயிகள் நேரடி நெல் விதைப்பு மற்றும் மின்மோட்டார் மூலம் சம்பா சாகுபடி செய்திருந்தனர்.

புயல் சின்னம் காரணமாக கடலூர் மாவட்டத்தில் கடந்த மாதம் வரை பெய்த தொடர்மழை காரணமாக விவசாயிகள் தங்களது விளை நிலங்களில் பயிர்களை ஒவ்வொரு கட்டமாக களை எடுத்து யூரியா, பொட்டாஷ், பூச்சிக்கொல்லி மருந்துகள் தெளித்து வந்தனர்.

இதன்மூலம் அனைத்து நெற்பயிர்களும் நன்றாக வளர்ந்து அறுவடை செய்ய தயாராக உள்ளது. இந்தநிலையில், காட்டுமன்னார்கோவில் அருகே ரெட்டியூர், அருண்மொழித்தேவன், திருமூலஸ்தானம், கூத்தூர் உள்ளிட்ட 10–க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள சுமார் 500 ஏக்கருக்கும் மேற்பட்ட விளைநிலங்களில் உள்ள நெற்பயிர்களை அறுவடை செய்யும் பணி நேற்று தொடங்கியது. விவசாயிகள் கூலி ஆட்கள் மற்றும் நெல் அறுவடை இயந்திரத்தை கொண்டு நெல் அறுவடைப் பணிகளில் முழுவீச்சில் ஈடுபட்டு வருகின்றனர்.

## நெல் அறுவடை இயந்திரம் வாடகை அதிகம்

இதுகுறித்து விவசாயி ஒருவர் கூறுகையில்:– விவசாயிகள் தங்களது விளை நிலங்களில் உள்ள நெற்பயிர்களை அறுவடை செய்வதற்காக நெல் அறுவடை இயந்திரம் மூலம் ஒரு மணி நேரத்திற்கு ரூ.2200 கொடுத்து வருகின்றனர். தற்போது, இயந்திரத்தின் வாடகை கடந்த ஆண்டைவிட ரூ.200 கூடுதல் ஆகும். நாளுக்கு நாள் வேளாண் இடுபொருட்கள் மற்றும் அறுவடை இயந்திர வாடகை கூடிக்கொண்டே போகிறது. ஆனால், நெல் பயிர் கொள்முதல் தொகை மட்டும் குறைந்து கொண்டே இருக்கிறது. விவசாயிகள் தங்களது விளை நிலங்களில் பயிர் செய்த 3½ மாத கால நெற்பயிர்களை காப்பாற்ற செலவு செய்த தொகை

கிடைக்கவே பெரும்பாடாக உள்ளது என வேதனையுடன் தெரிவித்தார். மேலும், இப்பகுதியில் அறுவடை செய்யும் நெற்பயிர்களை விவசாயிகளிடம் தனியார் நெல் கொள்முதல் வியாபாரிகள் 61 கிலோ எடை கொண்ட நெல்மூட்டைகளை ரூ.950–க்கு வாங்கிச் செல்கின்றனர். இது கடந்த ஆண்டை விட ரூ.350 குறைவாக உள்ளது, தற்போது, நெல்லுக்கு உரிய விலை கிடைக்கததால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

## தமிழக அரசுக்கு வருவாய் இழப்பு

விவசாயிகளிடம் வாங்கப்படும் நெல் மூட்டைகளை தனியார் நெல்கொள்முதல் வியாபாரிகள் அருகே உள்ள தமிழ்நாடு நுகர்வோர் வாணிபக் கழகத்தில் மூட்டை ஒன்றுக்கு வரியாக ரூ.8–ஐ செலுத்திவிட்டு அரிசி ஆலைகளுக்கு கொண்டு செல்ல வேண்டும்.

ஆனால், தற்போது அனைத்து தனியார் நெல் வியாபாரிகளும் நெல் மூட்டைகளை தமிழ்நாடு நுகர்வோர் வாணிப கழகத்திற்கு கொண்டு செல்லாமல் நேரடியாக அரிசி ஆலைகளுக்கு எடுத்துச் செல்வதால் தமிழக அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது. மேலும், காட்டுமன்னார்கோவில், சிதம்பரம் டெல்டா பகுதி விவசாயிகள் நலன்கருதி அறுவடை செய்வதற்காக மாவட்ட நிர்வாகம் பிற மாவட்ட வேளாண்துறை அலுவலகங்களில் உள்ள நெல் அறுவடை இயந்திரங்களை வரவழைத்து குறைந்த வாடகையில் நெல் அறுவடை செய்ய உதவ வேண்டும் என மாவட்ட நிர்வாகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**நெருஞ்சி முள் கிலோ ரூ.50–க்கு விற்பனை வெளிமாநில வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர்**



தேனி,

போடி பகுதிகளில் நெருஞ்சி முள் கிலோ ரூ.50–க்கு விற்பனை செய்யப்படுகிறது. மருத்துவ குணம் கொண்டதால் வெளிமாநில வியாபாரிகள் வந்து வாங்கிச்செல்கின்றனர்.

<u>நெருஞ்சி முள்</u>

சாலை ஓரங்களிலும், விளை நிலங்களிலும் களைச்செடியாக நெருஞ்சி முள் முளைத்து இருக்கும். இந்த நெருஞ்சி முள் செடியில் பூ, இலை, காய், வேர் என அனைத்தும் மருத்துவ குணம் கொண்டதாக உள்ளது. நெருஞ்சியின் மருத்துவ குணம் பற்றி சித்த, ஆயுர்வேத மருத்துவத்தில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இந்த நெருஞ்சி முள்ளில் இருக்கும் மருத்துவ குணம் சிறுநீர் கோளாறுகளுக்கும், பாலியல் பிரச்சினைகளுக்கும் சிறந்த மருந்தாக கருதப்படுகிறது. இதனை சித்த வைத்தியம் பார்ப்பவர்கள் காடுகளில் சென்று பறித்து வருவது வழக்கம். தற்போது போடி பகுதிகளில் இந்த நெருஞ்சி முள் விற்பனையும் நடந்து வருகிறது.

<u>கிலோ ரூ.50–க்கு விற்பனை</u>

தேனி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், தமிழகத்தின் பிற மாவட்டங்கள், அந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களில் இருந்தும் சித்த மருத்துவர்களும், வியாபாரிகளும் விவசாயிகளை தேடி வந்து நெருஞ்சி முள் வாங்கிச் செல்கின்றனர். இதற்காக போடி சிலமலை, சூலப்புரம் பகுதிகளில் வசிக்கும் விவசாயிகள் சிலர் தரிசு நிலங்களிலும், கண்மாய் கரைகளிலும் நெருஞ்சி முள் சேகரித்து வருகின்றனர். இவ்வாறு சேகரிக்கும் நெருஞ்சி முள்ளை காய வைத்து விற்பனை செய்து வருகின்றனர். வெளி மாநில வியாபாரிகள் ஒரு கிலோ ரூ.50 விதம் வாங்கிச் செல்கின்றனர். தரிசு நிலங்களில் சும்மா கிடக்கும் நெருஞ்சி முள்ளுக்கு தனி தேவை ஏற்பட்டு உள்ள தால் நெருஞ்சி முள் சேகரிப்பு பணியில் விவசாயிகள் மும்முர மாக ஈடுபடத்தொடங்கி உள்ளனர்.

**தேவதானப்பட்டி பகுதியில் பொங்கல் அறுவடைக்கு தயாரான கரும்புகள்**



தேவதானப்பட்டி, -

தேவதானப்பட்டி பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பொங்கல் கரும்புகள் தற்போது அறு வடைக்கு தயாராகி உள்ளன.

<u>பொங்கல் கரும்புகள்:</u> தேனி மாவட்டம், தேவதானப்பட்டியில் கட்டமாவடி, காமாட்சியம்மன் கோவில் பகுதிகளில் பொங்கல் கரும்பு அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. தேனி, மதுரை மாவட்டங்களில் சின்னமனூர், சோழவந்தான்

ஆகிய பகுதிகளுக்கு அடுத்தப்படியாக தேவதானப்பட்டியில் பொங்கல் கரும்பு அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது.

இதில் தேவதானப்பட்டி கரும்பிற்கு தனிச்சுவை உண்டு. இந்த ஆண்டு சுமார் 50 ஏக்கர் பரப்பளவில் இந்த பகுதியில் பொங்கல் கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு 100 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்ட நிலையில் இந்த ஆண்டு பருவமழை பொய்த்ததாலும், மஞ்சளாறு அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடப்படாத காரணத்தாலும் கரும்பு சாகுபடி பரப்பளவு குறைந்து உள்ளது. கடந்த மாசிமாதம் பயிரிடப்பட்ட கரும்பு பயிர், அணையில் இருந்து வெளியேறும் கசிவு நீர் மற்றும் கிணற்று நீர் மூலம் வளர்க்கபபட்டு, தற்போது அறுவடைக்கு தயாராக உள்ளது.

விலை உயரும்

இது குறித்து தேவதானப் பட்டி விவசாயிகள் கூறும் போது,‘தேவதானப்பட்டியில் கூலி ஆட்கள் சம்பள உயர்வால் கரும்பு சாகுபடி விவசாய செலவு அதிகரித்துள்ளது. குறிப்பாக கரும்பு பயிர் நடவு செய்த நாளில் இருந்து மாதந்தோறும் களை எடுக்க வேண்டும். 5 முறை தோகை உரிக்க வேண்டும். இந்த ஆண்டு ஒரு ஏக்கருக்கு ரூ.1 லட்சம் செலவாகி உள்ளது’ என்றார்கள்.

தேவதானப்பட்டி பகுதியில் இருந்து தூத்துக்குடி, திருச்சி, திருநெல்வேலி, ராமநாதபுரம் போன்ற வெளிமாவட்டங்களுக்கும், கேரளம், ஆந்திரம் போன்ற வெளிமாநிலங்களுக்கும் கரும்பு விற்பனை செய்யப்படுகிறது. பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கரும்பு வியாபாரிகள் தேவதானப்பட்டி பகுதியில் தற்போது முகாமிட தொடங்கி உள்ளனர். இந்த ஆண்டு சாகுபடி செலவு அதிகரித் துள்ளதால் கரும்பு விலை உயரும் வாய்ப்பு உள்ளதாக விவசாயிகளும், வியாபாரிகளும் தெரிவித்துள்ளனர்.

**சுருளி அருவியில் நீர்வரத்து குறைவு**



கம்பம், -

தேனி மாவட்டத்தில் புகழ்பெற்ற சுற்றுலாத்தலமாக கம்பம் அருகே உள்ள சுருளி அருவி விளங்குகிறது. மேற்குத் தொடர்ச்சி மலைய டிவாரத்தில் அமைந்துள்ள இந்த அருவிக்கு சுற்றுலா பயணிகள் அதிகளவில் வருகின்றனர். தற்போது வெளி மாவட்டங் களில் இருந்து சபரிமலைக்கு செல்லும் அய்யப்ப பக்தர்கள் கம்பம் வழியாக அதிகளவில் செல்கின்றனர்.

இவ்வாறு வரும் அய்யப்ப பக்தர்கள் அருகில் உள்ள சுருளி அருவிக்கும் தங்கள் வாகனங்களில் வருகின்றனர். இதனால் சுருளி அருவியில் சுற்றுலா பயணிகள் மற்றும் அய்யப்ப பக்தர்களின் கூட்டம் தற்போது அதிகளவில் காணப்படுகிறது. ஆனால் போதிய மழையின்றி அருவி யில் தண்ணீர் வரத்து குறைந்து காணப்படுவதால், இங்கு வரும் சுற்றுலா பயணிகளும், அய்யப்ப பக்தர்களும் ஏமாற்றம் அடைகின்றனர். இருப்பினும் குறைந்த அளவில் வரும் அருவி நீரில் நீராடி செல்கின்றனர் என்பது குறிப் பிடத்தக்கது.

**தூத்துக்குடி அருகே மழை குறைந்ததால் மஞ்சள் விளைச்சல் குறைந்தது**



தூத்துக்குடி, - தூத்துக்குடி அருகே மழை குறைந்ததால் மஞ்சள் விளைச்சல் குறைந்து உள்ளது, என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

மஞ்சள் சாகுபடி

பொங்கல் பண்டிகையின் போது, கரும்பும், மஞ்சள் குலையும் வைத்து வழிபடுவது வழக்கம். இதற்காக விவசாயிகள் மஞ்சள் பயிரிட்டு வளர்த்து வருகின்றனர். அதன்படி தூத்துக்குடி அருகே உள்ள சிவத்தையாபுரம் மற்றும் சுற்று வட்டாரங்களில் மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது.

இந்த பகுதியில் சமீபத்தில் வடக்கு கிழக்கு மழை போதுமான அளவு பெய்யாததால் மஞ்சள் விளைச்சல் குறைந்து உள்ளது. மஞ்சள் குலைகளும் மிகவும் குட்டையாக காணப்படுகின்றன. அதே நேரத்தில் நோய் தாக்குதல், களையெடுத்தல் போன்றவற்றுக்காக விவசாயிகள் அதிக அளவில் செலவு செய்து வருகின்றனர். ஆகையால் ஒரு மஞ்சள் குலையின் விலை உயர வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது.

வளர்ச்சி பாதிப்பு

இது குறித்து விவசாயி பார்த்திபன் கூறும் போது, தூத்துக்குடி சிவத்தையாபுரம், சாயர்புரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. இந்த ஆண்டு போதுமான மழை இல்லை. இதனால் மஞ்சள் குலைகளின் வளர்ச்சி குறைந்து காணப்படுகிறது. முன்பு ஒரு மஞ்சள் குலையின் இலை சுமார் 6 அடி உயரம் வரை வளரும். தற்போது 2 அடி முதல் 3 அடி உயரம் வரை மட்டுமே வளர்ந்து உள்ளது. அதே போன்று வெளிறிய நிறத்தில் காணப்படுகிறது. நோய் தாக்குதலில் இருந்து மஞ்சளை காப்பாற்ற அதிக அளவில் பணம் செலவு செய்து உள்ளோம். இதனால் ஒரு மஞ்சள் குலை குறைந்தது ரூ.10–க்கு விற்பனை செய்தால் மட்டுமே விவசாயிகள் பயன்பெற முடியும். இல்லையென்றால் விவசாயிகள் பெரும் நஷ்டத்தை சந்திக்க நேரிடும், என்று கூறினார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## அமெரிக்காவில் பனிப்புயல் 13 பேர் பலி



நியூயார்க் நகர சாலையில் குவிந்துள்ள பனிக்கட்டிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளார் ஒரு ஊழியர். படம்: புளூம்பெர்க்

அமெரிக்காவின் வடகிழக்குப் பகுதியில் உள்ள பாஸ்டன் முதல் நியூயார்க் வரையிலான நகரங் களில் வீசி வரும் பனிப்புயலுக்கு 13 பேர் பலியாகி உள்ளனர்.

அப்பகுதியில் கடும் பனிப்பொழிவுடன் காற்றும் வீசி வருகிறது. இதனால் இரவு நேர வெப்பநிலை ஜீரோ டிகிரிக்கும் கீழே சென்றுள்ளது. சாலைகளில் பனிக்கட்டிகள் குவிந்துள்ளதால் வாகனப் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. அத்து டன், ஆயிரக்கணக்கான விமான சேவைகளும் ரத்து செய்யப் பட்டுள்ளன.

கடந்த 2 நாள்களுக்கு முன்பு நியூயார்க் மேயராக பொறுப் பேற்றுக் கொண்ட பில் தே பிளாசியோ இதுகுறித்து கூறுகையி ல், "வரும் நாள்களில் பனிப்பொழிவு அதிகமாக இருக்கும். எனவே, பொதுமக்கள் வீட்டை விட்டு வெளியில் செல்வதைத் தவிர்க்கவும். அவசியம் வெளியில் செல்ல வேண்டியிருந்தால் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவும். குறிப்பாக வாகனங்களில் செல்வதைத் தவிர்க்கவும்" என்றார்.

இதற்கிடையே, வடகிழக்கு குளிர்கால புயல் தொடங்கி இருப்பதால், காற்றின் வேகம் அதிகரித்து வெப்பநிலை மேலும் மோசமாகும் என அமெரிக்க தேசிய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நியூயார்க்கின் தரைப்பரப்பில் 6 அங்குல அளவுக்கு பனி படர்ந்துள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 33 கி.மீ. ஆக உள்ளது.

நியூயார்க் மற்றும் பாஸ்டன் நகரங்களில் வெப்பநிலை மைனஸ் 10 டிகிரி பாரன்ஹீட்டாகக் குறையும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பனிப்புயல் காரணமாக இப்பகுதியில் 13 பேர் இறந்துள்ள தாக ஊடக தகவல்கள் கூறு கின்றன. குறிப்பாக, மோசமான வானிலை காரணமாக ஏற்பட்ட சாலை விபத்துகளே இந்த உயிரிழப்புக்கு முக்கிய காரணமாக இருந்துள்ளன.

**அவசரநிலை அறிவிப்பு**

ஆளுநர் ஆண்ட்ரு கியூமோ அவசரநிலை பிரகடனம் செய்துள்ளார். லாங் தீவுகள் முதல் அல்பனி வரையிலான 3 முக்கிய நெடுஞ்சாலைகளை இரவு நேரங்களில் மூட உத்தர விட்டுள்ளார்.

பாஸ்டன் நகரில் 2 அடி உயரத் துக்கும் சிகாகோ உள்ளிட்ட மற்ற நகரங்களில் 18 அங்குல அளவிலும் பனி படர்ந்துள்ளதாக தேசிய வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

**விமான சேவை ரத்து**

நாடு முழுவதும் உள்ள விமான நிலையங்களிலும் பனி படர்ந்துள்ளதால் 2,200 விமான சேவைகள் ரத்து செய்யப் பட்டுள்ளன. 3,000 விமானங்கள் தாமதமாக இயக்கப்பட்டன.

## பட்டுப்போன மரங்களால் பறந்துபோன பறவைகள்



களையிழந்து நிற்கும் வேடந்தாங்கல் சரணாலயம் ச.கார்த்திகேயன்

வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தில் போதிய பராமரிப்பின்றி மரங்கள் பட்டுப்போனதால், தேடி வந்த பறவைகள் ஓடிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

சென்னையில் இருந்து சுமார் 80 கி.மீ தொலைவில், காஞ்சிபுரம் மாவட்டத்தில், மதுராந்தகம் அருகில் வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் அமைந்துள்ளது. இந்த சரணாலயத்தை இந்தியாவை ஆண்ட பிரிட்டிஷ் அரசு 1798-ல் அடையாளம் கண்டு, 1858-ல் மேம்படுத்தியது. 1936-ம் ஆண்டு வேடந்தாங்கலில் உள்ள ஏரி, பறவைகள் சரணாலயமாக அறிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து 1962-ல் மெட்ராஸ் வன சட்டப்படி பறவைகள் சரணாலயமாக அங்கீகரிக்கப்பட்டது. அதன் பின்னர் 1972-ம் ஆண்டு வன உயிரின பாதுகாப்பு சட்டம் இயற்றப்பட்டு, அச்சட்டத்தின் கீழ், வேடந்தாங்கல் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இந்த பறவைகள் சரணாலயத்திற்கு இலங்கை, சைபீரியா, ஆஸ்திரேலியா, கனடா உள்ளிட்ட நாடுகளில் இருந்து, கூழைக்கடா, கரண்டிவாயன், நத்தைக்குத்தி நாரை, ஊசிவால் வாத்து, சாம்பல் நிற நாரை, வர்ண நாரை உள்ளிட்ட 25-க்கும் மேற்பட்ட வகைகளைச் சேர்ந்த சுமார் 40 ஆயிரம் பறவைகள் ஆண்டுதோறும் வந்து, இனப்பெருக்கம் செய்கின்றன.

இந்த பறவைகள் சரணாலயத்தில் முக்கிய ஆதாரமே நீரும், மரங்களும் தான். இந்நிலையில், சரணாலய எல்லைக்குள் சுமார் 90 மரங்கள், ஏரியில் நீர் இருந்தும் காய்ந்து கிடக்கின்றன. இதனால் வெளிநாட்டில் இருந்து வரும் பறவைகள், கூடு

கட்டி, அதில் தங்கி, முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்ய வாய்ப்பில்லாமல் போகும் சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்த மரங்களைப் பாதுகாக்க வனத்துறை சார்பில் போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படாத காரணத்தால், அங்குள்ள மரங்கள் காய்ந்து பட்டுப்போய் காணப்படுவதாக, பறவைகளை பார்வையிட வரும், சுற்றுலாப் பயணிகள் மற்றும் பறவை ஆர்வலர்கள் மத்தியில் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இது குறித்து பறவைகள் சரணாலய அதிகாரியிடம் கேட்டபோது, ‘‘பறவைகள் அதிகம் தங்கும் பிரதான பகுதியில் எந்த மரங்களும் காயவில்லை. சரணாலயத்தின் எல்லைப் பகுதிகளில் தான் மரங்கள் காய்ந்துள்ளன. காய்ந்துள்ள மரங்கள் அனைத்தும் 20 ஆண்டுகளுக்கு முன்பு நடப்பட்ட கருவேலமரங்கள். இவை வறண்ட பகுதியில் வளரக்கூடியவை. வயது முதிர்வு காரணமாக சில ஆண்டுகள் இம்மரங்கள் நீரில் இருந்தாலும் பட்டுப்போக வாய்ப்புள்ளது.

வழக்கமாக வனத்துறை சார்பில் ஏரிகளில் வளர்க்கப்படும் கருவேல மரங்கள், 5 ஆண்டுகளுக்கு பிறகு, வனத்துறையால் வெட்டி விற்பனை செய்யப்படும். இங்கு வன உயிரின சட்டப்படி மரங்கள் பாதுகாக்கப்பட்டு வருவதால், இங்குள்ள மரங்கள் வெட்டப்படவில்லை. அவை வயது முதிர்வு காரணமாக பட்டுப் போயுள்ளன. இதிலும் பறவைகள் வந்து அமருவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதால், காய்ந்த நிலையிலும் இம்மரங்கள் வனத்துறையால் அகற்றப்படவில்லை. பறவைகள் அமரவும், கூடு கட்டி வாழவும் ஏராளமான மரங்கள், வேடந்தாங்கல் ஏரியில் உள்ளன. பட்டுப்போன மரங்களால் பாதிப்பு ஏதும் இல்லை. இருப்பினும், அப்பகுதியில் இந்த ஆண்டு 500 கருவேல மரங்கள் மற்றும் 1500 நீர் கடம்பு மரங்களை வனத்துறை நட்டுள்ளது’’ என்றார்.

குருவிகளைத்தான் தொலைத்து

விட்டோம். நம் சந்ததிகளுக்காக தேடி வரும் பறவைகளையாவது பாதுகாக்க வேண்டியது நம் கடமை.